

கலைஞர் 100

1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 176 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 23 – செவ்வாய்க்கிழமை 06 பிப்ரவரி 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 176 : Thiruvalluvar Year - 2055 - Thai 23 - Tuesday 06 February 2024 - Madurai 12 Pages ₹ 5.00


### உங்கள் தாய் மண்ணான

# தமிழ்நாட்டுக்கு என்றும் துணை நிற்பீர்!

## ஸ்பெயின் வாழ் தமிழர்களிடையே முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

**மேட்ரிட் (ஸ்பெயின்) பிப். 6 -**

**“உங்கள் தாய் மண்ணாண தமிழ்நாட்டுக்கு என்றும் துணை நிற்பீர்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஸ்பெயின் வாழ் தமிழர்களிடையே உரையாற்றும் போது உருக்கமுடன் கூறினார்.**

தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஸ்பெயின் நாட்டில் உள்ள பல்வேறு முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகளை நேரில் சந்தித்து தமிழ்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள வலியுறுத்தி வருவதுடன், பல்வேறு முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து, “ஸ்பெயின் தமிழர்களுடன் முதல்வர்” எனும் நிகழ்வில் ஸ்பெயின் நாட்டில் வாழும் தமிழர்களிடையே நேற்று முன்தினம் (4.02.2024) கலந்துரையாடிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாட்டில் இருக்கிறோமா அல்லது வெளிநாட்டில் இருக்கிறோமா என்று எனக்கு இப்போது சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஸ்பெயின் நாட்டிற்கு இப்போதுதான் நான் முதல் முறை வருகிறேன். ஆனால், பல முறை வந்ததைப் போன்ற உணர்வைத் தரும் வரவேற்பை நீங்கள் அளித்திருக்கிறீர்கள். கடல் கடந்து வந்து வெளிநாட்டில் வாழும் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.02.2024) “ஸ்பெயின் தமிழர்களுடன் முதல்வர்” எனும் நிகழ்வில் ஸ்பெயின் நாட்டில் வாழும் தமிழர்களிடையே உரையாற்றினார். இந்நிகழ்வில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, முதலமைச்சரின் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், ஸ்பெயின் நாட்டிற்கான இந்தியத் தூதர் தினேஷ் பட்நாயக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நீங்கள் பிறந்த உங்களுடைய தாய் மண்ணான தமிழ்நாட்டிற்கு உங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும், செய்து கொண்டிருக்கிறீர்கள்; செய்யப் போகிறீர்கள்; செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**தலைவர் கலைஞர் உருவாக்கிய அமைப்பு!**

அயல்நாட்டில் இருக்கக்கூடியவர்களுக்காகவே துணை நிற்க வேண்டும் உதவி புரிய வேண்டும் அவர்ககளுக்கு ஏதேனும் பிரச்சினைகள் ஆபத்து ஏற்பட்டால், அதற்குத் தமிழ்நாடு துணை நிற்க வேண்டும் என்ற அடிப்படையில் தான், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். ஆனால் சில நாட்களுக்குள்ளாக ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அதனால் அது செயல்படாமல் போய் விட்டது.

இப்போது மீண்டும் தலைவர் கலைஞர் வழியில் நடைபோடும் நமது திராவிட மாடல் ஆட்சி உருவாகி இருக்கிறது. தலைவர் கலைஞர் என்ன செய்ய வேண்டும் என்று நினைத்தாரோ, அதனை நாங்கள் செய்ய காத்திருக்கிறோம்; தயாராக இருக்கிறோம்.

**வெளிநாடு வாழ் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு!**

அண்மையில் கூட, வெளிநாடுகளில் இருக்கும் தமிழர்களைச் சென்னைக்கு வரவழைத்து, அவர்களுடன் கலந்து பேசி; இதுவரை அவர்களை இரண்டு மூன்று முறை அழைத்துக் கூட்டம் போட்டு கலந்து பேசி, அவர்களது பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைத்திருக்கிறோம்.

**உலக முதலீட்டாளர் மாநாடு தமிழ்நாட்டிற்குப் பெருமை!**

உலக முதலீட்டாளர் மாநாட்டை அண்மையில் வெற்றிகரமாக நடத்தி, அதன் மூலமாகத் தமிழ்நாட்டிற்குப் பெருமையைத் தேடித் தந்திருக்கிறோம். அது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; இந்தியாவிற்கு மட்டுமல்ல; இந்தியாவைக் கடந்து, இன்றைக்குக் கடல் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களுக்கும் அது பெருமை தான்!

**தங்களின் உபசரிப்பு என்னை நெகிழ வைக்கிறது!**

பல்வேறு வெளிநாடுகளுக்குச் சென்று இருந்தாலும், இந்த ஸ்பெயின் நாட்டிற்கு வந்திருப்பதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமைப்படுகிறேன். என் மீது ஒவ்வொருவரும் பாசமும் நேசமும் அன்பும் கொண்டு அளித்த அந்த உபசரிப்பு என்னை நெகிழ வைத்து இருக்கிறது. உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வாழ்த்துக்களை இந்த நேரத்தில் தெரிவித்து, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்வில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, முதலமைச்சரின் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், ஸ்பெயின் நாட்டிற்கான இந்தியத் தூதர் தினேஷ் பட்நாயக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### பிரதமர் மோடிக்கு விசுவாசமான ஊடகங்கள்

## நாட்டின் உண்மை நிலை குறித்த செய்திகளை வெளியிட மறுப்பு!

### ராகுல் காந்தி விமர்சனம்!

புதுடெல்லி, பிப். 6 -

ராகுல் காந்தி சமூக வலைத்தளப் பதிவொன்றை வெளியிட்டுள்ளார். அதில், மோடியின் ஊடக நண்பர்கள் நாட்டைப் பற்றிய உண்மையை ஒருபோதும் சொல்ல மாட்டார்கள் என்றும், நாட்டுக்கு உண்மையைச் சொல்ல சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்த வேண்டி உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற தனது நிகழ்ச்சியில், மைக்கை தொழிற்சங்கத்தைச் சேர்ந்த ஒரு சகோதரரிடம் அளித்ததாகவும், அவர் மூலம் ஏழைத் தொழிலாளர்களின் நிலையை அனைவரும் கேட்டு மற்றவர்களுக்கு தெரிவிக்க வேண் டும் என்றும் ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.



ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை பணியமர்த்தும் போக்கை மோடி அரசு ஊக்குவிப்பதாகவும், 2011ஆம் ஆண்டு வரை 28 சதவீதம் தொழிற்சாலைகளில் மட்டுமே ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணிபுரிந்தனர், 2020 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 98சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும், ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுவதால் ஒவ்வொரு தொழிலாளியும் நலிவடைந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாத ஊதியம் பெறும் தொழிலாளர்கள் கூட வழக்கமான நேரத்தை விட கூடுதலாக வேலை செய்கிறார்கள் என்றும், அவர்களுக்கு பிஎஃப், ஓய்வூதியம் கிடைக்கவில்லை, எனவே ஒவ்வொரு தொழிலாளியும் தனது குடும்பத்தின் எதிர்காலத்தை இருண்டதாகப் பார்க்கிறார்கள் என்றும் பதிவிட்டுள்ள ராகுல் காந்தி, இந்தியாவின் வளர்ச்சிக்காக உழைக்கும் இந்தத் தொழிலாளர்களை வலுப்படுத்த காங்கிரஸ் விரும்புவதாகவும், ஆனால், பா.ஜ.க. அவர்களை ஒரு சில சக்தி வாய்ந்தவர்களின் அடிமைகளாக ஆக்க விரும்புகிறது என்றும் விமர்சித்துள்ளார்.

---

### பா.ஜ.க. ஆட்சி செய்யாத

## மாநிலங்களுக்கு நிதி வழங்குதில் பாரபட்சம்!

### ஒன்றிய அரசு மீது காங்கிரஸ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, பிப். 6 –

பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநிலங்களுக்கு நிதி வழங்குதில் ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டுவதாக மக்களவையில் காங்கிரஸ் குற்றம்சாட்டி உள்ளது.

மக்களவை விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய காங்கிரஸ் குழு தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, மாநிலங்களின் நிதி ஆதாரங்களை ஒன்றிய அரசு குறைத்து வருவதாக குற்றம்சாட்டினார். மாநிலங்களுக்கான ஜி.எஸ்.டி இழப்பீடு தொடர்ந்து வழங்க வேண்டும் என வலியுறுத்திய அவர், கர்நாடகா உள்ளிட்ட பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநிலங்களுக்கு நிதி வழங்குதில் ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டுவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

ஆதிர் ரஞ்சன் சௌத்ரி காங்கிரஸ் ஜி.எஸ்.டி. உள்ளிட்ட வரி வருவாயை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிப்பது குறித்து அரசியல் சட்டத்தில் தெளிவாக உள்ளது. இதற்கு ஒன்றிய அரசு மதிப்பளிக்க வேண்டும். ஆனால், பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநிலங்களுக்கு நிதிவழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக நாடு முழுவதும் கருத்து நிலவுகிறது. இதற்கு கர்நாடகா சிறந்த உதாரணமாக மாறியுள்ளது. கர்நாடக அமைச்சரவை ஒன்றிய அரசின் பாரபட்ச நடவடிக்கைக்கு எதிராக, போராடத் தொடங்கியுள்ளது.

---

### தூத்துக்குடியில்

## தி.மு.க. தேர்தல் அறிக்கைக் குழு ஆலோசனை!

### பல்வேறு தரப்பினரிடம் கருத்துகளை கேட்டறிந்தது!

தூத்துக்குடி, பிப். 6 -

மக்களவை தேர்தலையொட்டி, தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான குழு, தூத்துக்குடியில் பல்வேறு தரப்பினரிடமும் கருத்துக்களை கேட்டறிந்து வருகிறது

2024 மக்களவை தேர்தலையொட்டி, தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் 11 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. முன்னாள் எம்.பி. டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர்கள் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், அரசு தலைமைக் கொறடா கோ.வி.செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன், எழிலன் நாக நாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஆர்.என்.ராஜேஸ்குமார், எம்.எம்.அப்துல்லா, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுரைப்படி இக்குழு நேற்று முதல், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு சுற்றுப்பயணத்தை துவங்கி உள்ளது. உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் நாடாளுமன்றத்தில் ஒலித்திட வேண்டிய தமிழ்நாட்டின் கருத்துக்கள் என்ற தலைப்பில், தூத்துக்குடியில் நேற்று பல்வேறு தரப்பினரிடம் இக்குழு கருத்துக்களை கேட்டு வருகிறது.

தூத்துக்குடி, விருதுநகர், ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த தொழில் முனைவோர்கள், வர்த்தகர்கள், வியாபாரிகள், விவசாயிகள், மருத்துவர்கள், மீனவர்கள், மாணவர் சங்கங்கள், சமூக ஆர்வலர்கள், உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் கருத்துக்களை நேரடியாக கேட்டு மனுக்களாகப் பெற்று வருகின்றது. அமைச்சர்கள் கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், செஞ்சி மஸ்தான், மேயர் ஜெகன் பெரியசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் சண்முகையா, மார்கண்டேயன் உள்ளிட்ட ஏராளமானோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 06-02-2024

# நிதி அமைச்சருக்கு அவர் கணவரே பதிலளிக்கிறார் - 1

நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இடைக்கால நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்துவிட்டார். இந்தியப் பொருளாதாரத்தை அவர் ஏதோ இமயத்துக்கு தூக்கி நிறுத்திவிட்டதாக ஊடகங்கள் உருட்டுவதைப் பார்க்கும் போது சகிக்கவில்லை. நீளமான உரையை வாசித்ததும் அவர் தானாம். குறைவான உரையை வாசித்ததும் அவர் தானாம்.

**பொருளாதாரத்தையே உயர்த்தி விட்டதாகவும், வறுமையையே ஒழித்துவிட்டதாகவும், காங்கிரஸ் ஆட்சி கால பொருளாதார சீர்குலைவு குறித்து வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யப் போவதாகவும், பொருளாதாரமே சீராகிவிட்டது என்றும், மக்களின் வருவாயும் அதிக மாகி விட்டதாகவும், மக்களின் சராசரி வருவாய் 50 விழுக்காடாக அதிகரித்துள்ளது என்றும் வாய்க்கு வந்ததை எல்லாம் வாசித்திருக்கிறார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்.**

அவருக்கு வேறு யாரும் பதில் சொல்லத் தேவையில்லை. அவரது கணவர் பரகால பிரபாகர் அவர்கள் சொல்லி இருக்கும் சொற்களையே பதிலாகச் சொல்லலாம். 'The crooked timber Of new india' - என்ற அவரது நூல், 'புதிய இந்தியா எனும் கோணல் மரம்' என்ற தலைப்பில் வெளியாகி உள்ளது. (பத்திரிகையாளர் ஆர்.விஜயசங்கர் மொழி பெயர்த்து எதிர் பதிப்பகம் வெளியிட்டுள்ளது) லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் படித்தவர் இவர். 'மிட்வீக் மேட்டர்ஸ்' என்ற இவரது யூடியூப் சேனல் புகழ் பெற்றது. **இந்தியாவை பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் இணைந்து எத்தகைய கோணல் மரமாக ஆக்கிவிட்டார்கள் என்பதை புள்ளி விபரங்களோடு பரகால பிரபாகர் சொல்லி இருக்கிறார். அவரது கருத்தின் சில பகுதிகள் மட்டும் இங்கு எடுத்துரைக்கப்படுகிறது.**

* 1990ஆம் ஆண்டு தொடங்கிய காலகட்டத்தில் தற்போது முதன்முறையாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது.

* 2021ஆம் ஆண்டில் மட்டும் உலகத்தில் இருக்கும் ஏழைகளின் கூட்டத்தில் 75 மில்லியன் (7.5 கோடி) பேரை இந்தியா சேர்த்திருக்கிறது. இதன் காரணமாக, ஐக்கிய நாடுகள் சபையின் வளர்ச்சித் திட்டத்திற்கான அமைப்பு (United Nations Development Programme) வெளியிட்டிருக்கும் 2021-22ற்கான உலக மனிதவளர்ச்சிக் குறியீட்டு எண் பட்டியலில் இருக்கும் 191 நாடுகளில் இந்தியா 131ஆவது இடத்தில் இருக்கிறது.

* இந்தியாவின் அண்டை நாடுகளான இலங்கை 73ஆம் இடத்திலும், சீனம் 79ஆம் இடத்திலும், பூடான் 127ஆம் இடத்திலும், பங்களாதேஷ் 129 ஆம் இடத்திலும் இருக்கின்றன. பாகிஸ்தான் (161), மியான்மர் (149), மற்றும் நேபாளம் (143) மட்டுமே இந்தியாவை விட மோசமான நிலையிலிருக்கின்றன. இந்த மூன்று நாடுகளுமே தம் நவீன வரலாற்றில் பெரும்பாலும் பெரும்பான்மை மதம் சார்ந்த நாடுகளாகவே இருந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

* 2022க்கான உலக பசிக் குறியீட்டு எண் பட்டியலிலும் கூட இந்தியா 107ஆவது இடத்திலிருக்கிறது. அதற்கு முந்தைய ஆண்டில் (2021) 101ஆவது இடத்திலிருந்தது.

* நாட்டில் வேலை வாய்ப்பு சரிந்து கொண்டே இருக்கிறது. மோடி அரசு 2016ஆம் ஆண்டிலிருந்தே வேலைவாய்ப்பு குறித்த புள்ளி விவரங்களை வெளியிடுவதில்லை.

* 2015 - 16ஆம் ஆண்டில் வெளிவந்த விவரப்படி, அதற்கு முன்பிருந்த ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையின்மை 5% ஆக உயர்ந்திருந்ததும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

* அவ்வப்போது பல வித துறைகள் குறித்து கணக்கெடுப்பு நடத்தி வரும் தேசிய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகம் (National Sample Survey Office) 2017-18 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு, தொழிலாளர் எண்ணிக்கை ஆகியவை குறித்து கணக்கெடுப்பை நடத்திய போதும் விவரங்களை வெளியிடவில்லை; ஆனால் ஜனவரி 2019இல் வெளியான பிசினஸ் ஸ்டாண்டர்ட் பத்திரிகை அந்த விவரங்களைச் செய்தியாக வெளியிட்டது.

* நவம்பர் 2016இல் உயர் மதிப்புள்ள ரூபாய் நோட்டுகள் செல்லாதென்று மோடி அரசு வெளியிட்ட நாசகர அறிவிப்புக்குப் பின் வந்த முழு நிதியாண்டுதான் 2017-18. பிஸினஸ் ஸ்டாண்டர்ட் பத்திரிகையில் வெளியான செய்தியின் படி, 2017-18இல் வேலையின்மையின் அளவு அதற்கு முன் வந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உயர்ந்து 6.1% ஆக இருந்தது. இந்தச் செய்தி வெளியான அடுத்த கணமே தேசிய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகத்தின் விவரங்கள் இறுதிப்படுத்தப்படாதவை எனவும், அவை பரிசீலனையில் இருப்பதாகவும், அந்தக் கணக்கெடுப்பு செய்த முறையில் பிரச்சினை இருப்பதாகவும் ஒன்றிய அரசு அறிக்கை வெளியிட்டது. அந்த அலுவலகத்தின் முழு அறிக்கை உடனடியாக ஒளித்து வைக்கப்பட்டது. இதுநாள் வரையிலும் அது வெளியிடப்படவில்லை.

**★ ஒன்றிய அரசு வேலைவாய்ப்பு குறித்த விவரங்களை வெளியிடாத போதிலும், இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையம் (Centre for Monitoring Indian Economy) ஆகஸ்ட் 2022 இல் வெளியிட்ட அறிக்கையின்படி வேலையின்மையின் விகிதம் 8.3 விழுக்காடாக உயர்ந்திருந்தது. இந்தியாவின் வேலைவாய்ப்பு சந்தையில் 21 லட்சம் வேலைகள் இழக்கப்பட்டிருந்தன. அது இந்தியா உட்பட உலக நாடுகள் அனைத்தும் கோவிட்-19 பெருந்தொற்றின் மோசமான உலகத்திலிருந்து மீண்டு வந்து கொண்டிருந்த நேரம். நான் இதை எழுதிக் கொண்டிருக்கும் மார்ச் 2023இன் இறுதி நாட்களில் வேலையின்மை விகிதம் 7.76% ஆக இருக்கிறது.**

**- தொடரும்**



நாடாளுமன்றத் தேர்தலுக்கு கழகத்தினரைத் தயார்படுத்தும் விதமாக, கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் அமைத்துள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான கழக மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவினரான – கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கடந்த ஒரு வாரமாக தொகுதிவாரியாக கழக நிர்வாகிகளின் தேர்தல் பணிகளை ஆய்வு செய்து, தேர்தல் தொடர்பான அவர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்டு வருகின்றனர். இந்தக் கலந்தாலோசனைக் கூட்டங்கள் முடிவடைந்த சூழலில், முதலமைச்சர் அவர்கள், ஸ்பெயின் நாட்டிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக இக்குழு மேற்கொண்டு வரும் பணிகளின் நிலை, கழக நிர்வாகிகள் கூறிய கருத்துகள், அடுத்தகட்டப் பணிகள் தொடர்பாக பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.



தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் 12ஆம் தேதி ஆளுநர் உரையுடன் துவங்க உள்ளதாலும், அதனைத் தொடர்ந்து நிதி நிலை அறிக்கை 19ஆம் தேதி தாக்கல் செய்யப்பட உள்ளதாலும், ஆளுநர் உரையின் வரைவில் இடம் பெற வேண்டிய முக்கிய விவரங்கள் மற்றும் நிதிநிலை அறிக்கை ஆகியவை குறித்து நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் நேற்று முன்தினம் (4.2.2024) காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார்.

## குடிசைவாழ் மாணவிகளுக்கும்

# தன்னம்பிக்கை தரும் 'புதுமைப் பெண்' திட்டம்!

சென்னை, பிப். 6-

ஓலைக் குடிசைகளில் உள்ள சிறிய துவாரங்கள் வழியே கதிரவனின் ஒளிக்கதிர்கள் ஒரு குழல்போல் உள்ளே பாய்வதைப் பார்த்திருப்போம்.

அதுபோல, தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்களுடைய கருணை பொங்கும் ஆட்சியில் உதயசூரியனின் ஒளிக் கதிர்கள் இங்கே இடம்பெற்றுள்ள குடிசைக்குள் ஊடுருவிப் பாய்ந்து பயனளித்துள்ளது.

இந்தக் குடிசை இருக்குமிடம் ரெங்கநாதபுரம், நடுப்படுகை: குடிசையின் முன்புறத்தில் 100 மீட்டர் தொலைவில் திருமலை ராஜன் ஆறு: மறுபுறம் 400 மீட்டர் தொலைவில் நடாறு. இரண்டு ஆறுகளுக்கும் இடையில் உள்ள படுகையில் தான் இந்தக் குடிசை உள்ளது.

இந்தப் படுகையில் ஏறத்தாழ 35 குடும்பங்கள் உள்ளன. இந்தப் படுகை தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள பட்டீஸ்வரம் பேரூராட்சிக்கு உட்பட்டது. இந்தக் குடிசையில் இருந்து பட்டீஸ்வரம் ஏறத்தாழ நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள குழந்தைகள் பட்டீஸ்வரம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு நடந்து சென்றுதான் படிக்க வேண்டும். அப்படிச் சென்று படித்து பன்னிரண்டாம் வகுப்பில் (பிளஸ் டூ) தேர்ச்சி பெற்றவர்தான் பூர்ணா.

பூர்ணா, தன் தந்தை பன்னீர் செல்வம், தாய் காமாட்சி, கல்லூரியில் படிக்கும் தம்பி பால சுப்பிரமணியம் ஆகியோருடன் இந்தக் குடிசையில்தான் வாழ்கின்றார். பெற்றோர் இருவரும் விவசாயக் கூலித் தொழிலாளர்கள்.

பள்ளிப்படிப்பை முடித்து ஏறத்தாழ 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியில் சேர்ந்து பி.எஸ்.சி கணிதப் பாடத்தைத் தேர்வு செய்து படித்து வருகிறார். பட்டீஸ்வரத்திலிருந்து பேருந்தில் கல்லூரிக்குச் செல்கிறார்.

இந்தப் பூர்ணாவுக்கு மாதம் ரூ.1,000/ (ரூபாய் ஆயிரம்) வங்கி வழியாக நம் திராவிட நாயகரின் கருணை பொங்கும் புதுமைப் பெண் திட்டத்தால் சென்று சேர்கிறது.

இந்தப் பணம் கிடைத்துள்ளதை எண்ணி மிகுந்த மகிழ்ச்சி அடையும் பூர்ணா, இந்தப் பணம் எனக்குப் பல வழிகளில் பயன்படுகிறது. பேருந்து போக்குவரத்துக்கு, நோட்டுப் புத்தகங்கள் வாங்க பயன்படுகிறது. என் பெற்றோரின் குடும்பச் செலவுக்கும் பயன்படுகிறது.

படிக்கும்போதே சம்பாதிப்பது போன்ற உணர்வு எனக்கு வருகிறது. அதைவிட மனதில் ஒரு தன்னம்பிக்கை பிறக்கிறது. இந்தத் திட்டத்தை உருவாக்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருப்பிடம் நோக்கி என் கரங்கள் குவிந்து நன்றியை செலுத்துகின்றன.

என்னைப் போன்ற இலட்சக் கணக்கான ஏழை மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு கருணைத் தெய்வமாகவே காட்சி அளிக்கிறார்கள். அவரை நீடூழி வாழ்க வாழ்க என வாழ்த்திக் கொண்டிருக்கிறோம் மாணவிகள் நாங்கள் என்று மனம் நெகிழ்ந்து கூறுகிறார்.

# திருப்பத்தூர் - காரைக்குடியில் பேரறிஞர் அண்ணா நினைவு நாள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் தலைமையில் கழகத்தினர் அஞ்சலி!

சிவகங்கை, பிப். 6 -

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் அமைதிப் பேரணி துவங்கியது.

மதுரை சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர்கள் எஸ். சண்முகவடிவேல், விராமதி மாணிக்கம், பேரூர்க் கழகச் செயலாளர் ஆர். கார்த்திகேயன், பேரூராட்சி மன்றத் தலைவர் கோகிலா ராணி நாராயணன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், மாவட்ட சிறுபான்மை நல அமைப்பாளர் என்.எம். சாக்ளா, நிர்வாகிகள் ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், ஷாஜகான், ராமரவி, சுப்பிரமணியன், மனோகரன், பூக்கடை பாண்டி, பொருளாளர் ஏ. எம்.கண்ணன், காளிமுத்து உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் .

காரைக்குடியில் அண்ணா சிலைக்கு நகரக் கழகச் செயலாளர் என். குணசேகரன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் நகர மன்றத் தலைவர் எஸ்.முத்துதுரை, நிர்வாகிகள் சொ. கண்ணன், சன்.சுப்பையா, சேவியர் அன்பு, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், பொதுக் குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, தேவகோட்டை நகரச் செயலாளர் பெரிய.பாலா உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கு இணங்க மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் கொட்டாம்பட்டியில் ரூபாய் 4.90 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள நவீன பேருந்து நிலைய புதிய கட்டிட பணிக்கான விழாவில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் ஆகியோர் உள்ளனர்.



மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி, சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட துறைமுகம், வில்லிவாக்கம் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற கழகத்தினர்.

## கழக அரசின் சாதனைகளை - திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்லுங்கள்!

# ‘நாற்பதும் நமதே! நாடாளுமன்றமும் நமதே!’ என்பதே நமது இலக்கு!

## மத்திய சென்னை பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

சென்னை, பிப். 6 –

**சென்னை – பெரியார் திடலில், நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி பாக முகவர் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது, ‘‘கழக அரசின் சாதனைகளை, திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்லுங்கள்’’ – ‘‘நாற்பதும் நமதே!’ நாடாளுமன்றமும் நமதே’’ என்ற குறிக்கோளுடன் பணியாற்றுங்கள்” என்று வேண்டுகோள் விடுத்தார்.**

**மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட துறைமுகம், எழும்பூர், வில்லிவாக்கம் ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று மாலை, சென்னை வேப்பேரி பெரியார் திடலில் நடைபெற்றது.**

**சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு பாக முகவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி பேசினார்.**

அப்போது அவர் குறிப்பிட்டதாவது :–

“முதலில் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற மாதம் ஜனவரி 21ஆம் தேதி சேலத்தில் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டை வெகு சிறப்பாக, எழுச்சியோடு நடத்திக் காட்டி இருக்கிறோம். கிட்டத்தட்ட ஏழு லட்சம் இளைஞர்கள் அந்த மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு இலட்சம் பேர் மாநாட்டுத் திடலுக்குள்ளேயே வர முடியாத அளவிற்கு கூட்டம்.

### இந்தியாவின் கவனத்தை ஈர்த்த இளைஞர் அணி மாநாடு!

ஒட்டுமொத்த இந்தியாவுமே அன்றைக்கு நம்முடைய மாநாட்டைத்தான் உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள். மாநாட்டின் பெயரே மாநில உரிமைகள் மீட்பு மாநாடு. அதனால் என்னென்ன தீர்மானங்கள் நிறைவேற்றப் போகிறோம், தலைவர் அவர்கள் என்ன பேசப் போகிறார், ஒவ்வொரு பேச்சாளர்களும் என்ன பேசுகிறார்கள். நிகழ்ச்சிகளை எப்படி நடத்தப் போகிறார்கள் என்று எல்லோருமே கூர்ந்து கவனித்தார்கள். ஒரு எழுச்சி மாநாட்டை, வெற்றி மாநாட்டை நடத்தி முடித்திருக்கிறோம்

சென்னை கிழக்கு மாவட்டத்திலிருந்து கலந்து கொண்ட இளைஞர் அணித் தம்பிமார்களுக்கும், அதை ஒருங்கிணைத்த மாவட்டச் செயலாளர் அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு எனக்கு முன்பு பேசிய அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் தனக்கே உரிய பாணியில் சூசகமாக, வரும் தேர்தலில் வாய்ப்பு கிடைத்தால் போட்டி போடுவேன் என்று சொன்னார். அவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றால் சென்னை கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் விட்டு விடுவீர்களா? அவரே வேறு தொகுதிக்குப் போக வேண்டும் என்று நினைத்தால்கூட நீங்கள் விடமாட்டீர்கள். யார் வேட்பாளர் என்பதை தலைவர் அவர்கள்தான் அறிவிப்பார்கள். ஆனால் யார் வேட்பாளராக அறிவித்தாலும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நினைவில் கொள்ளவேண்டும். அதை நோக்கித்தான் நாம் பயணம் பண்ண வேண்டும். ஆம், நாடாளுமன்றத் தேர்தலில் புதுச்சேரியையும் சேர்த்து 40 தொகுதிகளிலும் போட்டியிடுவது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் என்ற அந்த ஒரு எண்ணத்தோடுதான் நாம் அனைவரும் களப்பணி ஆற்ற வேண்டும். கண்டிப்பாக தலைவர் அவர்கள் உங்களுக்கு நல்ல ஒரு வசதியான வேட்பாளரை, சிரித்த முகம் கொண்ட ஒரு வேட்பாளரை வெற்றி வேட்பாளரை உங்களிடத்தில் ஒப்படைப்பார். நீங்கள் நிச்சயமாக அவரை வெற்றி பெறச் செய்து விடுவீர்கள், எனக்குத் தெரியும். நான் கேட்பதெல்லாம் வாக்கு வித்தியாசம் மட்டும்தான். சென்ற முறை மூன்று லட்சத்து 6 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அண்ணன் தயாநிதி மாறன் அவர்களை ஜெயிக்க வைத்தீர்கள்.

அந்தத் தேர்தலுக்குப்பிறகு தொடர்ந்து கழகப் பணி, மக்கள் பணி ஆற்றியிருக்கிறோம். கோவிட் காலத்தில் மக்களோடு மக்களாக நின்றோம். ஒவ்வொரு மழை வெள்ளக் காலத்திலும் மக்களோடு மக்களாக நின்று அவர்களை தைரியமாக எதிர்கொள்கிறோம். அந்த தைரியத்தோடுதான் மீண்டும் இந்தத் தேர்தலில் களத்தில் நிற்கிறோம்.

### அமைச்சர் – அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு நன்றி!

அதேபோல் இங்கே வரவேற்கும்பொழுதும் சிலர் என்னை பட்டப்பெயர் வைத்து அழைத்தீர்கள். அதில் கொஞ்சம் கூட எனக்கு உடன்பாடு கிடையாது. ‘சின்னவர்’ என்று கூப்பிடுகிறீர்கள். வயதிலும் அனுபவத்திலும் உங்களைவிட உண்மையாகவே நான் சின்னவன்தான். அதற்காக சின்னவர், இளைய கலைஞர், வாலிபப் பெரியார் என்றெல்லாம் அழைப்பதை தயவு செய்து தவிர்த்து விடுங்கள். சட்டமன்ற உறுப்பினர், இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர்... என்ற இந்தப் பொறுப்பெல்லாம் இன்றைக்கு வரும் நாளைக்குப் போய்விடும். ஆனால் எப்போதும் உங்கள் வீட்டுப் பிள்ளையாக, உங்கள் வீட்டு செல்லப் பிள்ளையாக இருக்கவே நான் ஆசைப்படுகிறேன். அதுதான் நிரந்தரம். இப்போது அமைச்சராக இருப்பதால் கொஞ்சம் பொறுப்பான செல்லப் பிள்ளையாக இருக்க முயற்சிக்கிறேன். தயவுசெய்து பட்டப்பெயர் வைத்து அழைப்பதை தவிர்த்து விடுங்கள். இந்த நிகழ்ச்சியை பெரியார் திடலில் ஏற்பாடு செய்ததற்காக அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.



மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி, சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட துறைமுகம், வில்லிவாக்கம் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று முன்தினம் மாலை, சென்னை–பெரியார் திடலில், மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் சிறப்புற நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். தயாநிதி மாறன் எம்.பி., பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், முன்னாள் எம்.எல்.ஏ. கே.எஸ்.ரவிச்சந்திரன் மற்றும் தலைமைக் கழக தொகுதிப் பார்வையாளர்கள், பகுதிக் கழக – வட்டக் கழகச் செயலாளர்கள், பாகநிலை முகவர்கள் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டார்கள்.

அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் சொன்னதைப் போல் தொடர்ந்து பாக முகவர்கள் மாநாட்டினை தலைவர் அவர்கள் ஒவ்வொரு மண்டலமாக சென்று நடத்தினார்கள். இன்றைக்கு நாம் சந்திக்கப் போகின்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கு தமிழ்நாட்டிலேயே ஒரு மாவட்டத்தில் பாக முகவர்கள் கூட்டம் முதலில் நடக்கிறது என்றால், அது இந்த சென்னை கிழக்கு மாவட்டத்தில்தான்.

### அமைச்சர் சேகர்பாபு தொடங்குவது அனைத்தும் வெற்றியில் முடியும்!

**சேகர்பாபு அண்ணன் ஆரம்பித்து வைத்தார் என்றால். அது எப்போதுமே வெற்றியில் தான் முடியும். இன்றைக்கு அவர் ஆரம்பித்து வைத்திருக்கிறார். உதயசூரியனும் கிழக்கில்தான் உதிக்கும், கிழக்கு மாவட்டத்தில் இன்றைக்கு பாக முகவர்கள் கூட்டத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறோம். கைதட்டினால் மட்டும் பத்தாது; கைகோர்த்து ஒற்றுமையாக வேலை செய்ய வேண்டும்.**

இந்தத் தேர்தல் பணியை நம்முடைய தலைவர் அவர்கள் கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு முன்பே ஆரம்பித்து விட்டார். மூன்று குழுக்கள் அமைத்தார். அதில் ஒருங்கிணைப்புக் குழுவில் நான் இருக்கிறேன். ஒவ்வொரு தொகுதியாகச் சந்தித்து அதில் இருக்கக்கூடிய நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம் வரச் சொல்லி கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் இரண்டு மணி நேரம் ஒவ்வொரு நாளும் நான்கு தொகுதிகளைச் சந்திக்கிறோம். தொகுதியில் இருக்கக்கூடிய சின்ன சின்ன பிரச்சனைகள், மனக் கசப்புகள், தொகுதிப் பிரச்சனைகள், வெற்றி வாய்ப்புகள் என்று இப்படி தொடர்ந்து கலந்துரையாடிக் கொண்டிருக்கிறோம். இன்றோடு 36 தொகுதி முடித்து விட்டோம். மீதியுள்ள 4 தொகுதிகளையும் நாளை முடித்துவிடுவோம். அந்த ஆலோசனைக் கூட்டத்தில் நிர்வாகிகள் சொன்னதை வைத்துப் பார்த்தால் நிச்சயம் 40க்கு 40ஐ நாம்தான் வெற்றிபெற போகிறோம்.

### உழைப்பை வெற்றியாக மாற்றும் பொறுப்பு பாகமுகவர்களுக்கு உண்டு!

இதைத்தவிர தொகுதிப் பங்கீட்டுக் குழு, தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு என தனியாக 2 குழுக்கள் உள்ளன. இப்படி மூன்று குழுக்கள் தனித் தனியாக இறங்கி கழக வேலையைச் செய்து கொண்டிருக்கிறோம் என்றால் நாங்கள் வைத்திருக்கின்ற ஒரே நம்பிக்கை பாக முகவர்கள் ஆகிய நீங்கள்தான். நாங்கள் எவ்வளவுதான் பயணம் செய்தாலும், என்னதான் பணிகள் செய்தாலும் அதை வெற்றியாக மாற்றக்கூடிய வாய்ப்பு அது உங்கள் கையில் மட்டும்தான் இருக்கிறது.

இன்றைக்கு நம்முடைய சேகர்பாபு அண்ணன் மூன்று தொகுதிகளைச் சேர்ந்த 708 பேருக்கு எழுதும் அட்டை, குறிப்பேடு, பேனா, வாக்காளர் பட்டியல், ஊக்கத்தொகை ஆகியவற்றைக் கொடுத்திருக்கிறார். இப்போது அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்களும் இதைப் பின்பற்றியே ஆகவேண்டும். நான், தலைவர், மாவட்டச் செயலாளர்கள் ஆகிய நிர்வாகிகள் வாக்காளர்களிடம் ஓரளவுக்குதான் பிரச்சாரத்தைக் கொண்டு போய் சேர்க்க முடியும். ஆனால், பாக முகவர்களாகிய நீங்கள்தான் ஒவ்வொரு வாக்காளர்களின் வீட்டுக்குள்ளேயே சென்று அவர்களுடன் பேசி அவர்களை ஏன் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும். ஏன் ஒன்றிய பா.ஜ.க.வை விரட்டியடிக்க வேண்டும் என்ற அந்தப் பிரச்சாரத்தை நீங்கள் தான் செய்ய வேண்டும். உங்களால் மட்டும்தான் செய்ய முடியும்.

தேர்தல் நாள் அன்றைக்கு யார், யார் விடுபட்டுப் போய் இருக்கிறார்கள். யார் யார் இன்னும் வாக்களிக்க வரவில்லை, எந்தெந்த வீடுகளில் இருந்து யார்யார் இன்னும் வரவில்லை என்று அவர்களை வீட்டுக்குகே சென்று கூட்டிக் கொண்டு வந்து உதய சூரியன் சின்னத்தில் ஓட்டு வாங்குகின்ற வரைக்கும் உங்களுடைய பணி. அதன்பிறகு வாக்கு எண்ணிக்கையில் வெற்றிபெறும் வரை உங்களுடைய பணி இருக்கிறது.

இந்த இரண்டரை வருட தி.மு.க ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும். ஞாபகப்படுத்திக் கொண்டே இருங்கள். கடும் நிதி நெருக்கடியில் ஆட்சிக்கு வந்தோம். ஆட்சிக்கு வந்து இரண்டரை வருடம் ஆகிவிட்டது. சொன்ன வாக்குறுதிகளையெல்லாம் எப்படி காப்பாற்றப் போகிறோம் என்று ஒட்டுமொத்த மக்களும் காத்துக் கொண்டிருந்தார்கள்.

தலைவர் அவர்கள் முதல் சாதனையாக மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து வசதியான விடியல் பயணத்துக்கு முதல் கையெழுத்துப் போட்டார். இந்தத் திட்டத்தினால் பயன்பெறுகின்ற மகளிர் மாதா மாதம் 900 ரூபாய் சேமிக்கிறார்கள். இதுவே வருடத்திற்கு கிட்டத்தட்ட 12 ஆயிரம் ரூபாய். அதேபோல் ‘புதுமைப்பெண்’ திட்டம், ‘நான் முதல்வன்’ என்ற திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், அதைவிட முக்கியம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்.

> ### குடியரசுத் தலைவரை அழைக்காதது ஏன்?
>
> **சமீபத்தில் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைத் திறந்தார்கள். இந்த நாட்டின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை நாடாளுமன்ற கட்டடத் திறப்பு விழாவுக்கு அழைக்கவில்லை. ஏனென்றால் அவர் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர், கணவரை இழந்தவர். அந்தக் காரணத்திற்காக அவரை அழைக்கவில்லை. ஆனால் செங்கோல் வைக்கிறோம் என்று இருக்கிற எல்லா சாமியார்களையும் அழைத்துக்கொண்டு சென்றார்கள்.**

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைத் துவங்க வேண்டும் என்று தலைவர் அவர்கள் சொல்லும்போது, முடியாது நிதி நெருக்கடி இருக்கிறது என்று அதிகாரிகள் கூறினர். பிறகு, ஒரு கோடி ரேசன் கார்டுகளுக்குள்தான் கொடுக்கமுடியும் என்றார். ஆனால், தகுதியுள்ள அனைத்து மகளிர்க்கும் கொடுக்க வேண்டும் என்று தலைவர் சொன்னார்.

### தகுதியுள்ள மகளிர்க்கு உரிமைத் தொகை!

இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பித்தவர்கள் எவ்வளவு பேர் தெரியுமா? ஒரு கோடியே 60 லட்சம் பேர். இப்போது இன்றைக்கு இந்தத் திட்டத்தின் மூலம் மாதாமாதம் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு தலா ஆயிரம் ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தில் தகுதியுள்ள சிலர் விடுபட்டிருக்கலாம். நம்முடைய கழக மகளிர் அணியினருக்குக் கூட கிடைக்காமல் இருக்கலாம். இப்படி தகுதியுள்ள யாருக்கெல்லாம் கிடைக்கவில்லையோ அவர்களுடைய பெயர், தொலைபேசி எண், ரேசன் கார்டு எண், முகவரியுடன் நம் கழக நிர்வாகிகள் மூலம் என்னிடம் கொடுங்கள். தகுதியுள்ள மகளிர்க்கு உரிமைத் தொகையைக் கொண்டு சேர்ப்போம். உரிமைத் தொகை 90 விழுக்காட்டினருக்குச் சேர்ந்துவிட்டது. அவர்கள் நம்மை பாராட்ட மாட்டார்கள். ஆனால் கிடைக்காமல் இருக்கிற 10 விழுக்காட்டினர்தான் குறை சொல்வார்கள். அதையும் கூடிய விரைவில் சரிசெய்வோம். டிசம்பர் மாதம் சென்னையில் பெரிய வெள்ளம் வந்தது என்பதும், தூத்துக்குடி நெல்லை மாவட்டங்களில் பெருமழை ஏற்படுத்திய பாதிப்புகள் என்ன என்பதும் உங்களுக்குத் தெரியும். அதற்கு இழப்பீடாக 6,000 ரூபாயை உடனடியாக வழங்கினார் தலைவர். இந்த 2 பாதிப்புகளுக்கும் சேர்த்து இழப்பீட்டுத் தொகையாக 35,000 கோடி ரூபாயை ஒன்றிய அரசிடம் கேட்டிருக்கிறோம். ஆனால் ஒன்றிய அரசு ஒரு பைசாகூட இதுவரை கொடுக்கவில்லை. இதைத்தான் நாம் எதிர்க்கிறோம், இதைத்தான் நாம் கேள்வி கேட்கிறோம்.

### உரிமைக்குக் குரல் கொடுப்போம்!

அடுத்து நம்முடைய தலைவர் யாரை முடிவு செய்கிறாரோ, தி.மு.க. யாரை முடிவு செய்கிறதோ அவர்தான் அடுத்த பிரதமர் என்ற நிலையை நாம் உருவாக்க வேண்டும். அ.தி.மு.க. அடிமைகள் போலத்தான் நாமும் இருப்போம் என்று நினைத்து நம்மை பயமுறுத்தப் பார்க்கிறார்கள். கடந்த 8 வருடங்களாக அ.தி.மு.க. ஆட்சியை எப்படி வைத்திருந்தார்கள்? சி.பி.ஐ., வருமான வரித்துறை, அமலாக்கத்துறையை வைத்து அவர்களை எப்படி பயமுறுத்தினார்களோ, அதைப்போல நம்மையும் பயமுறுத்த முயற்சிக்கிறார்கள். அந்த உருட்டல், மிரட்டல்களுக்கெல்லாம் பயந்திட தி.மு.க. ஒன்றும் அடிமைகள் கூட்டம் இல்லை. உறுதியோடு எதிர்த்து நிற்போம். உரிமைக்கு குரல் கொடுப்போம்.

2019 நாடாளுமன்றத் தேர்தலில் நாம் எதிர்க்கட்சியாக இருந்தபோதே தமிழ்நாடு, புதுச்சேரி சேர்த்து நாற்பதுக்கு 39 தொகுதிகளில் வெற்றி பெற்றோம். அதேபோல உள்ளாட்சித் தேர்தலிலும் எதிர்க்கட்சியாக இருந்தபோதே மிகப்பெரிய வெற்றி பெற்றோம். நாம் ஆளுங்கட்சியான பிறகு சந்திக்கப் போகிற மிக முக்கியமான தேர்தல் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல். கடந்த நாடாளுமன்றத் தேர்தலை விட ஒரு வாக்கு குறைவாக வாங்கினால் கூட, தி.மு.க. அரசின் மீது மக்களுக்கு அதிருப்தி என்று எதிரணியினர் ஓட்டு குறைந்ததையே ஒரு பிரச்சாரமாக்கி விடுவார்கள். நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுகள், அடுத்துவரும் சட்டமன்றத் தேர்தலில் எதிரொலிக்கும். இதை நீங்கள் உணர்ந்து பணியாற்ற வேண்டும். எனவே நாற்பதுக்கு நாற்பது வென்று தலைவரிடம் கொடுத்தால், நாம் எதிர்பார்க்கிற பிரதமரை பதவியில் அமர்த்திவிட்டால், தமிழ்நாட்டுக்கு என்னென்ன தேவையோ அதையெல்லாம் கேட்டு வாங்கிவிடலாம். அந்த நிலைமையை பாக முகவர்களாகிய நீங்கள்தான் உருவாக்க வேண்டும்.

### தணிக்கைத் துறை சுட்டிக் காட்டும் – ஒன்றிய அரசின் மாபெரும் ஊழல்!

பா.ஜ.க. நம்மை குறைசொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால் பா.ஜ.க. ஆட்சியின் ஊழல்களை சி.ஏ.ஜி. அறிக்கை (ஒன்றிய, மாநில அரசின் செலவுகளை தணிக்கை செய்யும் அமைப்பு) தெளிவாக வெளிக்காட்டியுள்ளது. கடந்த 9 ஆண்டுகளில் ஏழரை லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஒன்றிய அரசின் செலவுகளுக்கு முறையான கணக்கு இல்லை. அந்தப் பணம் எங்கே போனது என்று யாருக்கும் தெரியவில்லை! ஒரு கிலோ மீட்டர் சாலை போடுவதற்கு 250 கோடி ரூபாய் செலவு செய்திருப்பதாக ஒன்றிய பா.ஜ.க. அரசு கணக்குக் காட்டியுள்ளது. பல வருடங்களுக்கு முன்பு ‘ரமணா’ என்றொரு திரைப்படம் வந்தது, நீங்கள் பார்த்திருப்பீர்கள். அந்தப் படத்தில் ஒருவர் இறந்துவிடுவார், அதை மறைத்து உயிரோடுதான் இருக்கிறார் என்று சொல்லி, மாத்திரை மருந்து வாங்கிவரச் சொல்லி பணம் கட்ட வைப்பார்கள். பணத்தை வசூலித்த பிறகுதான் இறந்ததைச் சொல்வார்கள். இப்படி நாம் திரையில் பார்த்ததை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிஜத்தில் செய்து காட்டியிருக்கிறது.

இறந்துபோன 88,000 பேருக்கு ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்ததாகக் கணக்குக் காட்டியிருக்கிறார்கள். அதுவும் ஒரே எண்ணில் இந்த மோசடியைச் செய்திருக்கிறார்கள். இதையெல்லாம் ஒவ்வொன்றாக நம்முடைய தலைவர் கேட்கிறார். இதற்கெல்லாம் பதில் சொல்ல ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு துப்பில்லை.

நிதி கேட்டதற்கு மரியாதைக்குரிய ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் என்னை விமர்சிக்கிறார். “உங்கள் அப்பா வீட்டு காசையா கேட்டோம்?” என்று கேட்டதில் என்ன தவறு இருக்கிறது? அதற்கு டெல்லியில் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பு வைத்து, உதயநிதி மரியாதையாகப் பேசக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று எனக்கு ஒரு பெரிய பாடமே எடுத்தார். “மரியாதைக்குரிய அம்மா அவர்களே, மாண்புமிகு உங்கள் அப்பா வீட்டின் பணத்தை நான் கேட்கவில்லை. எங்கள் தமிழ்நாட்டு மக்கள் கொடுத்திருக்கக்கூடிய வரிப் பணத்தைதான் கேட்கிறேன்.” என்று மறுநாளே நான் மரியாதை கொடுத்துவிட்டேன். நீங்கள் கேட்ட மரியாதையை நான் கொடுத்துவிட்டேன், நாங்கள் கேட்ட நிதியை எப்போது கொடுப்பீர்கள்?

இன்னொரு உதாரணத்தையும் சொல்கிறேன். சமீபத்தில் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைத் திறந்தார்கள். இந்த நாட்டின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை நாடாளுமன்ற கட்டடத் திறப்பு விழாவுக்கு அழைக்கவில்லை. ஏனென்றால் அவர் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர், கணவரை இழந்தவர். அந்தக் காரணத்திற்காக அவரை அழைக்கவில்லை. ஆனால் செங்கோல் வைக்கிறோம் என்று இருக்கிற எல்லா சாமியார்களையும் அழைத்துக்கொண்டு சென்றார்கள்.

10 நாட்களுக்கு முன்பு இன்னொரு நிகழ்ச்சி நடைபெற்றது. அயோத்தியில் ராமர் கோயிலைக் கட்டியிருக்கிறார்கள். தி.மு.க. எந்த மதத்துக்கோ, வழிபாட்டுக்கோ எதிரான கட்சியல்ல. எங்களுக்கு ‘‘ஒன்றே குலம், ஒருவனே தேவன்’’. நீங்கள் கோவில் கட்டினால் தமிழ்நாட்டு மக்கள் நன்றாக வழிபடுவார்கள். ஆனால் தேர்தல் என்று வந்துவிட்டால் உதயசூரியன் சின்னத்துக்குத்தான் வாக்களிப்பார்கள். அதைப் புரிந்துகொள்ளுங்கள்.

### மன்னிப்பு கேட்க மாட்டேன்! நான் கலைஞரின் பேரன்!

இந்த ராமர் கோயில் திறப்பு விழாவுக்கு சாமியார்கள் யாருமே செல்லவில்லை. மோடி வருகிறார், அதனால் நாங்கள் யாரும் வரமாட்டோம் என்று சங்கராச்சாரியார்கள் சொல்லிவிட்டார்கள். இதைத்தான் 4 மாதங்களுக்கு முன்பு நான் சொன்னேன். அனைவரும் சமம் என்று அப்போது நான் ஒன்றியப் பிரதமருக்கும் சேர்த்துப் பேசியிருக்கிறேன். அதற்காக வழக்கு நடந்துகொண்டிருக்கிறது, ‘‘மன்னிப்புக் கேட்க மாட்டேன். நான் கலைஞரின் பேரன். சொன்னால் சொன்னதுதான்!’’ என்று சொல்லிவிட்டேன். என் மீது தவறு இல்லை, பிறப்பால் அனைவரும் சமம். இங்கு ஜாதி, மத பாகுபாட்டுக்கு இடமில்லை. நீதிமன்றத்தின் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

இங்கே ஒரு அடிமைகள் கோஷ்டி இருக்கிறது. ஓ.பி.எஸ்.தான் முதலில் கைதாவார் என்று எடப்பாடி பழனிசாமி சொல்கிறார். எடப்பாடி பழனிசாமிதான் கைதாவார் என்று அதேநாள் மாலையில் ஓ.பி.எஸ். சொல்கிறார். இரண்டு பேரும் ஒன்றாகத்தான் கைதாகப் போகிறார்கள் என நான் நினைக்கிறேன். கைதாகி சிறைக்குப் போகும்போதாவது தவழ்ந்து தவழ்ந்து செல்ல வேண்டாம், கால் வலி வரும் என்ற கோரிக்கையை மட்டும் நான் அவர்களுக்கு வைக்கிறேன்.

### ஒவ்வொரு வீட்டிலும் உண்டு – திராவிட மாடல் அரசின் திட்டங்கள்!

அ.தி.மு.க.வினர் நிலைமையை யோசித்துப் பார்த்தால் மிகவும் பாவமாக இருக்கிறது. அ.தி.மு.க.வின் நிறுவனரும் கலைஞரின் நெருங்கிய நண்பருமான மறைந்த முதலமைச்சர் எம்ஜிஆருக்கு டிசம்பர் 24ஆம் தேதி நினைவுநாள். அதனையொட்டி திருப்பத்தூர் மாவட்டத்தில் ஒரு நிகழ்ச்சி நடத்தினார்கள். அதற்காக மாவட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் அடித்த போஸ்டரில் எம்.ஜி.ஆருக்கு பதிலாக நடிகர் அரவிந்த் சாமியின் புகைப்படத்தை வைத்திருக்கிறார்கள். இதைச்சொன்னால் கூட யாரும் நம்ப மாட்டார்கள், ஆனால் உண்மையாக நடந்தது. தலைவர் எம்.ஜி.ஆரா? அல்லது அரவிந்த் சாமியா? என்றுகூட தெரியாத அளவில்தான் அ.தி.மு.க. இன்றைக்கு இருக்கிறது. இதற்குமேல் அந்த கட்சியைப் பற்றி என்னவென்று சொல்வது? அவர்களை எதிர்த்துதான் நாம் அரசியல் செய்ய வேண்டியிருக்கிறது.

**நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி பாக முகவர்களான உங்கள் கையில்தான் இருக்கிறது. மக்களோடு மக்களாகப் பழகுங்கள், அவர்களின் பிரச்சினையைக் கேளுங்கள். உங்களால் தீர்க்க முடிந்த பிரச்சினை களை நீங்களே தீர்த்து வையுங்கள், முடியாவிட்டால் வட்டக் கழகச் செயலாளர், பகுதிக் கழகச் செயலாளர், மாவட்டச் செயலாளர், அமைச்சரிடம் கொண்டுசென்று தீர்த்து வையுங்கள். வாக்காளர் பட்டியலைச் சரிபாருங்கள். கழக ஆட்சியின் திட்டங்கள், சாதனைகளை ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் கொண்டுசேருங்கள். ஒவ்வொரு வீட்டிலும் நிச்சயம் திராவிட மாடல் அரசின் ஒரு பயனாளி இருப்பார். அவர்களிடம் அதனை எடுத்துச் சொல்லுங்கள்.**

### சூப்பர் டூப்பர் செயல்பாபு!

இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்திருக்கிற அண்ணன் சேகர்பாபு அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டும். சேகர்பாபு அல்ல, செயல்பாபு என்று நம்முடைய தலைவரே பலமுறை சொல்லியிருக்கிறார். வெறும் செயல்பாபு அல்ல, சூப்பர் செயல்பாபு என்று நானும் பலமுறை சொல்லியிருக்கிறேன். இப்போது சொல்கிறேன், வெறும் சூப்பர் செயல்பாபு அல்ல, சூப்பர் டூப்பர் செயல்பாபு அவர். இவ்வளவு சிறப்பாக இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்த அண்ணன் செயல்பாபு அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகள்.

**2021இல் அடிமைகளை விரட்டி வீட்டுக்கு அனுப்பினோம். இப்போது இந்தத் தேர்தலில் அடிமைகளின் முதலாளிகளையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும். நமக்கு இருக்கிற ஒரே குறிக்கோள் நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி. நாற்பதும் நமதே, நாடாளுமன்றமும் நமதே. நன்றி, வணக்கம்.**

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மணிமுடி, இரவிச்சந்திரன், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் நாகலிங்கம், பிரபு, கௌதம் உள்பட கழகத்தினர் பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக பாக முகவர்களுக்கு பாகவாரியாக வாக்காளர் பட்டியல், குறிப்பேடு மற்றும் நிதியுதவியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு தினத்தை முன்னிட்டு திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் உள்ள ஆயிரம்கால் மண்டபத்தில் வைத்து நடைபெற்ற பொது விருந்தில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்றார். நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா, மேயர் சரவணன், துணை மேயர் ராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெகதீஸ் ஒன்றியச் செயலாளர் ஜோசப்பெல்சி, மாமன்ற உறுப்பினர் உலகநாதன், பகுதி செயலாளர் நமச்சிவாயம், திட்ட இயக்குனர் சுரேஷ் உள்பட கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் ஜானகிபுரம் கிளைச் செயலாளர் ரவிச்சந்திரன் அவரது இல்ல திருமண விழாவில் கழகத் துணை பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றிய செயலாளர் தே.முருகவேல், கிளை செயலாளர் பிரபு, குமரவேல், துணை தலைவர் ராஜா மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### நெல்லை மாவட்டம் – இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில்

# உயர்மட்ட பாலம் - சாலைப் பணிகள் - பேவர் பிளாக் கட்டிடம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு தொடங்கி வைத்தார்!

நெல்லை, பிப். 6 -

நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட காவல்கிணறு ஊராட்சி காவல்கிணறு, லெப்பை குடியிருப்பு, சமூகரெங்கபுரம், சமூகரெங்கபுரம் துரை குடியிருப்பு, மேலூர் ஆகிய பகுதிகளில் உயர்மட்ட பாலம், பேவர் பிளாக், கட்டிடம் மற்றும் சாலை பணிகள் உள்பட ரூபாய் 9.33 கோடியில் பணிகளை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

அதன்படி இராதாபுரம் தொகுதிக்கு உட்பட்ட காவல்கிணறு ஊராட்சி லெப்பை குடியிருப்பில் ரூ1.58 கோடியில் தரைப் பாலத்தை, உயர்நிலை பாலமாக அமைக்கும் பணியும், ரூ1.28 கோடியில் காவல்கிணறு முதல் லெப்பை குடியிருப்பு வரை செல்லும் சாலையை அகலப்படுத்தும் பணியும், சமூக ரங்கபுரத்தில் ரூ1.96 கோடியில் சமூகரெங்கபுரம் பேருந்து நிலையம் வழியாக செல்லும் மாநில நெடுஞ்சாலையை உறுதிப்படுத்தல் மற்றும் பேவர்பிளாக் கற்கள் பதிக்கும் பணியும், ரூ4.44 கோடியில் காரியாகுளத்தில் இருந்து சமூக ரெங்கபுரம் வரை செல்லும் சாலையை அகலப்படுத்தும் பணியும்.

அதனைத் தொடர்ந்து துரை குடியிருப்பு மேலூரில் ரூபாய் 7 லட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நியாய விலைகடை கட்டுமான பணி.ஆக மொத்தம் ரூபாய் 9.33 கோடியில் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு பணிகளை அடிக்கல் நாட்டிம் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர், சாந்தி சுயம்பு ராஜ், இராதாபுரம் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஜோசப்பெல்சி, நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் சேகர்,உதவி பொறியாளர்கள் முத்து முருகன், தினேஷ்,பொதுப் பணித்துறை உதவி செயற் பொறியாளர் ஜெயந்தி, ஒன்றிய உறுப்பினர்கள் இசக்கிபாபு, தாய் செல்வி இளங்கோ, ஊராட்சி மன்ற தலைவர்களின் இந்திரா சம்பு, அந்தோணி அருள், அரவிந்தன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சமுகை முரளி, வர்த்தக அணி ராதாபுரம் ஒன்றிய அமைப்பாளர் தக்காளி குமார், ஒன்றிய துணைச் செயலாளர் செழியன், சமூகரெங்கபுரம் துணைத் தலைவர் பேச்சியப்பன் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கடலூர் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்!

கடலூர், பிப். 6 -

கடலூர் சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள் கூட்டம், கடலூர் வன்னியர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமை தாங்கினார்.

சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மேயர் சுந்தரி ராஜா, மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், மாவட்டக் கழகச் செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொகுதி மேற்பார்வையாளர் அங்கயற்கண்ணி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, வாக்காளர் விண்ணப்ப படிவத்தினை வழங்கினர்.

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேசியதாவது;

கடலூர் நாடாளுமன்ற தொகுதியை திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் உங்களை எல்லாம் சந்தித்து பகுதி வரியாக பொறுப்பாளர்களை நியமித்து தேர்தல் பணி ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிட்டத்தட்ட கடலூர் மாநகரத்தில் மட்டும் ஒன்றரை லட்சம் வாக்குகள் இருக்கின்றது.

நம்மை நம்பி பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்த பொறுப்பிற்கு நம்பிக்கையூட்டும் விதமாகவும், நியாயம் சேர்க்கும் விதமாக வும் உழைக்க வேண்டும்.

நான் உட்பட நாம் செய்யும் தவறுகளை தலைமைக்கு உளவுத்துறை மூலமாக சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இனிமேல் தவறுகளை செய்யாமல் செயலாற்ற வேண்டும். மீறி தவறு செய்தவர்களுக்கு கழகத்தில் இடமில்லை என்ற நிலையும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அதை உணர்ந்து ஒழுங்காக பணியாற்ற வேண்டும். கடலூர் சட்டமன்ற தொகுதியில் கிட்டத்தட்ட எப்பொழுதும் திராவிட முன்னேற்ற கழகம் வெற்றி பெறுகின்ற சூழல் உண்டு. பத்தாண்டு காலம் ஆட்சியில் இருந்த அ.தி.மு.க. எதுவும் செய்யாததை, இப்போது நாம் செய்து கொண்டிருக்கின்றோம்.

நம்முடைய சாதனைகளை இப்போது நாம் சொல்லி வாக்குகள் கேட்கின்ற தகுதியை நமக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் உருவாக்கி கொடுத்திருக்கிறார்கள்.

நமக்கு இப்பொழுது அனைத்து பதிவுகளும் கிடைத்துள்ளது. எனவே எந்த பொறுப்பிலும் இல்லாமல் பெற்ற வாக்குகளை விட தற்பொழுது அதிக வாக்குகள் பெறுவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும்.

இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் கே. ஆர்.தனஞ்செயன், இர. விஜயசுந்தரம், மாநகர கரக அவைத் தலைவர்

தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.விக்ரமன், பொதுக்குழு உறுப்பினர் கணேசன், பகுதி செயலாளர் சலீம், நடராஜன், ஜி.பி. வெங்கடேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரநிதிகள் கலந்து கொண்டனர்.

### தலைமை – பேரா. சுப.வீரபாண்டியன்! பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலக அமைப்பாளர்

# பெருங்கவிக்கோ வா.மு.சே. பிறந்த நாள் - ‘நோபல் தவம்’ நூல் வெளியீடு!

## அமைச்சர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் வெளியிடுகிறார்!

சென்னை, பிப். 6-

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமனின் 89வது பிறந்தநாள் - ‘நோபல் தவம் நூல் வெளியீட்டு விழா 9.2.2024 - வெள்ளி மாலை 4.30 மணியளவில் சென்னை ஆயிரம் விளக்கு பாவாணர் மத்திய நூலகப் பேரரங்கத்தில் நடைபெறுகிறது.

முதல் நிகழ்வாக, மாலை 4.30 மணியளவில் கவி அரங்கம், கண்மதியின் தலைமையில் பழ தமிழாளன், செந்தமிழ்ச் செழியன், ம.கணபதி, சக்தி பாரதி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

முகம் இளமாறன் வரவேற்பு கவிதையும் இரவி பாரதி தொடக்கவுரையும் ஆற்றுகின்றனர்.

கவி அரங்கத்தில் திருக்குறள் வை.மா.குமார், மறத்தமிழ்வேந்தன், கவிஞர்கள் கலை அரசன், பா.முருகையன், குமணன், தளபதி, மறத் தமிழன், சந்திரசேகரன், வீரமுத்து, கலைச் செல்வன் ஆகியோர் கவி பாடுகின்றனர்.

மாலை 6 மணியளவில் டி.கே.எஸ்.கலைவாணனின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கும் நூல் வெளியீட்டு விழாவில் வா.மு.சே. திருவள்ளுவர் வரவேற்புரையும், வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர் அறிமுக உரையும் ஆற்றுகின்றனர்.

விழாவில் அரசு தலைமைக் கொறடா கோவி. செழியன் தொடக்க உரையாற்றுகிறார்.

விழாவிற்கு திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேரா.சுப.வீரபாண்டியன் தலைமை வகிக்கிறார்.

எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., வா.மு.சே.கவிஅரசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விழாவில் அமைச்சர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் நூலை வெளியிட்டு சிறப்பிக்கிறார்.

முதல் நூலை, கோ.விசுவநாதன், வி.ஜி.சந்தோசம், மாம்பலம் சந்திரசேகர் ஆகியோர் பெறுகின்றனர்.

திராவிடர் கழகம் துரை சந்திரசேகரன், கவிவேந்தர் மு.மேத்தா, கவிஞர் மனுஷ்யபுத்திரன், தேவநேசன் கருப்பையா, சிவக்குமார் ஆகியோர் பாராட்டுரை வழங்குகின்றனர்.

நிகழ்ச்சியை உலக நாயகி பழனி தொகுக்கிறார். சோ.கருப்பசாமி நன்றி கூறுகிறார். நிகழ்ச்சியை நா.மதியழகன், பூங்கொடி, வா.மு.சே. மணிகண்டன் ஆகியோர் ஒருங்கிணைக்கின்றனர்.

### நாடாளுமன்ற தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கன்னியாகுமரி வருகை!

# நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தரப்பினரும் கோரிக்கை மனுக்களை வழங்குவீர்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள்!



நெல்லை, பிப். 6 -

தி.மு.க தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கழக துணைப் பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையில் இன்று (06.02.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 9 மணிக்கு கன்னியாகுமரி மாவட்டம்

நாகர்கோவில், தேராக் கால்புதூர் கங்கா கிராண்டியூர் திருமண மண்டபத்தில் தி.மு.க. தேர்தல் அறிக்கை குழு வருகிறது.

கழக நிர்வாகிகள், வர்த்தகர்கள், பல்துறை சேர்ந்த நிபுணர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு தேர்தல் அறிக்கையில் இடம் பெற வேண்டிய கோரிக்கைகளை மனுக்களாக வழங்கலாம்.என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் நாற்பதும் நமதே நாடாளுமன்றம் நமதே என்ற இலக்கினை நோக்கி தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான இந்தியா கூட்டணி மாபெரும் எழுச்சியோடு, முழுமையாக வெற்றிகளை குவித்திட தீவிரமாக பணியாற்றி வருகிறார்கள். வெற்றி வியூகத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டு மக்களுக்கும்,நமது மாவட்டத்திற்கும் பொது மக்களுக்கு அதி முக்கிய தேவையான பணிகளை பட்டியலிட்டு தரும் பட்சத்தில் நமது கோரிக்கைகள் அனைத்தும் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதிகளாக வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும்.

அந்த வகையில் தலைவர் அவர்கள் எண்ணுகின்ற வழியில் நமது நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள், பொதுமக்கள், விவசாயிகள், வியாபார பெருங்குடி மக்கள், அரசு ஊழியர்கள்,ஆசிரிய பெருமக்கள், பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்கள், அனைத்து தரப்பு பொது மக்கள் ஆகியோர் செய்ய வேண்டிய பணிகளை கோரிக்கைகளை, மனுவாக கொடுத்து திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கை வாக்குறுதியாக அளிப்பதற்கு ஏற்ற வண்ணம் தயார் படுத்திக் கொண்டு வருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் குழுவானது கழக துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் இன்று (06 .02.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 9 மணிக்கு கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில், தேராகால் புதூர் கங்கா கிராண்டியூர் திருமண மண்டபத்தில் வைத்து, இக்குழுவானது கோரிக்கை மனுக்களை பெற்றும், பொதுமக்களிடம் கருத்து கேட்கும் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் நெல்லை கிழக்கு மாவட்டத்தை சார்ந்த கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பங்கேற்று தங்கள் பகுதியின் கோரிக்கைகளை மனுவாக கொடுத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### அணைகட்டு மத்திய ஒன்றிய செயலாளர்

# ஏரிபுதூர் பி.வெங்கடேசன் இல்ல மணவிழா!

## அமைச்சர் துரைமுருகன் தலைமை! அமைச்சர் ஆர்.காந்தி முன்னிலை!



வேலூர், பிப். 6 -

கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரை முருகன் தலைமையில் அமைச்சர் காந்தி முன்னிலையில் வேலூர் மாவட்டம் அணைக்கட்டு மத்திய ஒன்றிய கழக செயலாளர் ஏரி புதூர் பி.வெங்கடேசன் இல்ல திருமண வரவேற்பு விழா பிப்ரவரி 12ந்தேதி நடக்கிறது.

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு மத்திய ஒன்றிய கழகச் செயலாளர் ஏரி புதூர் பி.வெங்கடேசன் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி கீதா தம்பதியரின் மகன் என்ஜீனியர் வி. ரகோத்தமன்- வினிஷா என்ற வரலட்சுமி ஆகியோரது திருமண வரவேற்பு விழா வருகிற12ந்தேதிஅணைக்கட்டுதாலுகாஆபீஸ் எதிரில் உள்ள டி.வி.ஆர். திருமண மஹாலில் நடக்கிறது.

நிகழ்ச்சியில் நீர்ப்பாசனம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சரும் கழகப் பொதுச் செயலாளருமான துரைமுருகன் அவர்கள் தலைமை தாங்குகிறார். கைத்தறி துறைமற்றும் துணிநூல்துறை

அமைச்சர் இராணிப் பேட்டை ஆர்.காந்திமுன்னிலை வகிக்கிறார்.

வேலூர் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்த குமார் எம்.எல்.ஏ, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த்,

ஆம்பூர் தொகுதி எம்.எல்.ஏ,ஏ.சி.வில்வநாதன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் குமார பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்தி பேசுகிறார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை மத்திய ஒன்றிய கழக செயலாளர் ஏரிப்புதூர்வெங்கடேசன் செய்துள்ளார்.



தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு தினத்தை முன்னிட்டு சுரண்டையில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் ஷெரிப், கென்னடி, அழகுசுந்தரம், திவான்ஒலி, ஜெயக்குமார், ராஜேஸ்வரன், பாலசுப்பிரமணியன், குட்டி என்ற சங்கர், சுடலை வெள்ளத்துரை, பொன்.செல்வன், ரமேஷ், முத்துராமலிங்கம், முத்துக்குமார், சங்கரநயினார், ஜேம்ஸ், ரஹீம், கருப்பணன், சங்கர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் தேனி நகர செயலாளர் நாராயண பாண்டியன் ஏற்பாட்டில் நகரக் கழக அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் கழக மூத்த முன்னாடிகள் கலந்து கொண்டனர்.

### திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

# ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றியம் - ஸ்ரீராமபுரம் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றியம், ஸ்ரீராமபுரம் பேரூர்ச் செயலாளராக பணியாற்றி வரும் ஜெ.வண்ணவெங்கட சுப்பையா உடல்நலக்குறைவு காரணமாக, தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **அ.ராஜா (எ) அப்துல்ரகுமான்**, (10, முகமதியார்புரம் தெரு, ஸ்ரீராமபுரம் அஞ்சல், திண்டுக்கல் மேற்கு வட்டம், திண்டுக்கல் மாவட்டம் - 624 622) ஸ்ரீராமபுரம் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 05.02.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். உடன் நகரச் செயலாளர் கார்த்திக், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் ஆகியோர் உள்ளனர்.



சென்னை – அண்ணா அறிவாலயம் – ‘முரசொலி மாறன் வளாக’க் கூட்ட அரங்கில் – கழகக் கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடத்த அமைக்கப்பட்ட – கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையிலான – கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் முனைவர் க.பொன்முடி, ஐ.பெரியசாமி, ஆ.இராசா, கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., ஆகியோர் உள்ளிட்ட கழகக் குழுவினருடன் – ம.தி.மு.க. தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைக் குழுவினரான ம.தி.மு.க. அவைத் தலைவர் ஆடிட்டர் அர்ஜுனராஜ், பொருளாளர் மு.செந்திலதிபன், அரசியல் ஆய்வு மையச் செயலாளர் ஆவடி இரா.அந்திரிதாஸ், தேர்தல் பணிச் செயலாளர் வி.சேஷன் ஆகியோர் தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தினர்.



சென்னை – அண்ணா அறிவாலயம் – ‘முரசொலி மாறன் வளாக’க் கூட்ட அரங்கில் – நேற்று முன்தினம் கழகக் கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடத்த அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையிலான – கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் முனைவர் க.பொன்முடி, ஐ.பெரியசாமி, ஆ.இராசா, கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. உள்ளிட்ட கழகக் குழுவினருடன் – மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கூட்டணிக் கட்சி தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைக் குழுவினரான – மார்க்சிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர்கள் பி.சம்பத், பெ.சண்முகம், மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் க.கனகராஜ், எச்.குணசேகரன் ஆகியோர், தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தினர்.

### வே.ஜெயபாலன் – ஈ.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலை!

# குற்றாலத்தில் 394 பேருக்கு தாலிக்கு தங்கம்! ரூ.1.53 கோடியில் திருமண நிதியுதவி!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வழங்கினார்!

தென்காசி.பிப்.6-

தென்காசி மாவட்டம் குற்றாலம் கலைவாணர் கலையரங்கத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் திருமண நிதி உதவி திட்டம் சார்பில் தாலிக்கு தங்கம் வழங்கும் நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்று 394 பயனாளிகளுக்கு 3152 கிராம் தாலிக்கு தங்கமும் ரூபாய் 1.53 கோடி மதிப்பிலான திருமண நிதி உதவி தொகைக்கான காசோலையினையும் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. சட்டமன்ற உறுப்பினர்கள் பழனி நாடார் (தென்காசி) சதன்திருமலைகுமார் (வாசுதேவநல்லூர்)ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

இந்நிகழ்வில் அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் தாலிக்கு தங்கம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. பெரும்பாலான சமயங்களில் திருமணத்தின் போது ஒரு பெண் தங்கத்தால் செய்யப்பட்ட திருமாங்கல்யம் அணிவது ஒரு வழக்கமான கலாச்சாரத் தேவையாகும். மேலும் பெற்றோர்கள் அவர்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் கலாச்சார பின்னணியின் படி திருமண விழாவை கொண்டாடுகிறார்கள். இருப்பினும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவை சேர்ந்த பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளின் திருமணச் செலவுகளில் சமாளிக்க முடியாமல் தவிக்கின்றனர்.அத்தகைய பெற்றோர்களுக்கு உதவவும், அவர்களின் மகள்களை சரியான வயது வரை படிக்க ஊக்குவிக்கவும் அரசால் திருமண உதவித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும் ஆதரவற்ற பெண்கள், மறுமணம் செய்யும் கைம்பெண்கள், கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகள் மற்றும் கைம்பெண்களின் மகள் ஆகியோருக்கு உதவும் வகையில் திருமண உதவித் திட்டங்கள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஈ.வெ.ரா.மணி அம்மையார் நினைவு ஏழை விதவைகளின் மகளுக்கான திருமண திட்டத்தின் கீழ் பள்ளிபடிப்பு எனில் ரூபாய் 25000ம் நிதி உதவியும் 8 கிராம் தங்க நாணயமும்,பட்டப்படிப்பு எனில் ரூபாய் 50,000 மற்றும் 8கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகிறது. அன்னை தெரசா ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவி திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு பள்ளி படிப்பு எனில் ரூபாய் 25,000 நிதி உதவி 8 கிராம் தங்க நாணயமும்,பட்டப்படிப்பு எனில் 50,000ம் மற்றும் 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகிறது.டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி கலப்புத் திருமண உதவி திட்டத்தின் கீழ் மணமகள் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு பள்ளி படிப்பு எனில் ரூபாய் 25,000ம் நிதி உதவியில் 15,000ம் மின்னணு மூலமாகவும் ரூபாய் 10,000 தேசிய சேமிப்பு சான்றிதழாகவும், 8 கிராம் 22 கேரட் தங்க நாணயத்துடன் வழங்கப்படுகிறது.பட்டம்பட்டயபடிப்பு பெற்றவர்களுக்கு 30,000, மின்னணு மூலமாக வும் ரூபாய் 20000, தேசிய சேமிப்பு சான்றிதழாகவும் 8 கிராம் தங்க நாணயத்துடன் வழங்கப்படுகிறது.

தென்காசி மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக ஈ.வெ.ரா.மணியம்மை விதவை மகள் திட்டத்தில் 316 பயனாளிகளுக்கும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி கலப்பு திருமண உதவி திட்டத்தில் 48 பயனாளிகளுக்கும், அன்னை தெரசா ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவி திட்டத்தில் 30 பயனாளிகளுக்கும் மொத்தம் 394 ஏழை பயனாளிகளுக்கு தலா 8 கிராம் தங்கம் வீதம் 3152 கிராம் தங்கநாணயம் (ரூ1,93,94,256) மதிப்பீட்டில் மற்றும் ரூபாய் 1,53,25,000ம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்கான பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.அத்தனை திட்டங்களையும் பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பேசினார்.

நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி,மாவட்ட சமூக நல அலுவலர் மதிவதனா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தமிழ்ச்செல்வி, தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர், ஒன்றிய குழு தலைவர்கள் ஷேக்அப்துல்லா (தென்காசி) திவ்யா மணிகண்டன்

(ஆலங்குளம்) மாவட்ட பொருளாளர் ஷெரிப், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செல்லத்துரை, சேக்தாவூது, ஆறுமுகச்சாமி பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், தமிழ்ச்செல்வி, ஒன்றிய செயலாளர்கள் அழகுசுந்தரம், திவான்ஒலி, ஜெயக்குமார், சிவன் பாண்டியன், சுரேஷ்,சீனித்துரை,

நகரச் செயலாளர்கள் வெங்கடேசன், அப்பாஸ், பிரகாஷ், சுடலை, குட்டி என்ற சங்கர்முத்தையா, பண்டாரம், மாவட்ட அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, பாண்டியன்,சங்கீதா, துணை அமைப்பாளர்கள் கருப்பணன், சுரேஷ், மாரியப்பன், ஐவேந்திரன் தினேஷ், அப்துல்ரஹீம், சுப்பிரமணியன் உள்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாநில உரிமைகள் காத்திட – ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

‘மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி’யின் சார்பில் 2024 பிப்ரவரி 8ஆம் தேதி அன்று

## மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறும்

# “கண்டன ஆர்ப்பாட்டத்தில்”

### கழக நிர்வாகிகள் – தோழர்கள் அனைவரும் கலந்து கொள்வீர்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைப்படி, மாநில உரிமைகள் காத்திட ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் 2024 பிப்ரவரி 8 (வியாழக்கிழமை) அன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நடைபெறும் ‘‘கண்டன ஆர்ப்பாட்டத்தில்’’, கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு, ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு எதிராக தமது கண்டனக் குரலை எழுப்பிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், தத்தமது மாவட்டத்தில் உள்ள மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்துகொள்ள உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 4-2-2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



விழுப்புரம் மாவட்ட நிர்வாகம் சார்பில் விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள நகராட்சி திடலில் அரசு புத்தகக் கண்காட்சியை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து அரங்குகளை பார்வையிட்டார். உடன் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். லட்சுமணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக் சிவாச் ஆகியோர் உள்ளனர்.

# நாடாளுமன்றத் தேர்தல் 2024

## ‘நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு’ மேற்கொள்ளும்

# விரிவான சுற்றுப்பயணம்

## தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024 - நாடாளுமன்ற தேர்தலுக்கான திமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பிப்ரவரி 5-ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு திருமிகு. கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் பயணம் செய்து பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்கவிருக்கிறது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து தி.மு.க தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கீழ்க்கண்ட அட்டவணைப்படி பயணம் மேற்கொண்டு கழக நிர்வாகிகள், தொழிற்துறையினர், கல்வியாளர்கள், பல்துறை வல்லுநர்கள், மருத்துவர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் நேரடியாக சந்திப்பார்கள்.

### தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு விரிவான சுற்றுப் பயண விவரம்

| தேதி | இடம் | கழக மாவட்டம் |
|---|---|---|
| “ பிப்ரவரி-6 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய |
| “ பிப்ரவரி-7 | மதுரை | மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர், சிவகங்கை, தேனி வடக்கு, தேனி தெற்கு, திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு |
| “ பிப்ரவரி-8 | தஞ்சாவூர் | தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, திருவாரூர், நாகை , மயிலாடுதுறை, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு |
| “ பிப்ரவரி-9 | சேலம் | சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு |
| “ பிப்ரவரி-10 | கோயம்புத்தூர் | கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நீலகிரி |
| “ பிப்ரவரி-11 | திருப்பூர் | ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, கரூர் |
| “ பிப்ரவரி-16 | ஒசூர் | கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு |
| “ பிப்ரவரி-17 | வேலூர் | வேலூர் , இராணிப்பேட்டை, திருப்பத்தூர் |
| “ பிப்ரவரி-18 | ஆரணி | திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு |
| “ பிப்ரவரி-20 | விழுப்புரம் | விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, அரியலூர், பெரம்பலூர் |
| “ பிப்ரவரி-21, 22, 23 | சென்னை | சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய |

குறிப்பு: மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வரும் சில நாட்களுக்கு முன்பாகவே, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



காஞ்சிபுரம் மாநகராட்சி புதிய கட்டிடம்
மஞ்சள்நீர் கால்வாய் மற்றும் சாலை திட்டம்
அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தில் புதிய கட்டிடம்
திட்டங்களை சட்டமன்ற பேரவையில்
நான் வைத்த கோரிக்கையை ஏற்று திட்டங்களை வழங்கிய
கழகத் தலைவர்
மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும்
இளந்தலைவர்
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
நன்றி ! நன்றி !! நன்றி !!!
கலைஞர் 100 1924-2024
பிப்ரவரி 6, 2024 அடிக்கல் நாட்டி
பணியினை துவக்கி வைக்க காஞ்சிக்கு வருகை தரும்
மாண்புமிகு.
கே.என்.நேரு
நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
கழக முதன்மை செயலாளர்
அவர்களை வருக ! வருக !! என வரவேற்கும்
மாண்புமிகு
தா.மோ.அன்பரசன்
சிறு, குறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சர்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்
க.சுந்தர் B.Sc., M.L.A.
மாவட்ட கழக செயலாளர்
வழக்கறிஞர். சி.வி.எம்.பி.எழிலரசன் B.E., B.L., MLA
செயலாளர், தி.மு.க. மாணவர் அணி
காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர்




கழகத் தலைவர் மாண்புமிகு.
தமிழ்நாடு முதலமைச்சர்
இளந்தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர், மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
ஆகியோர்களின் நல்வாழ்த்துக்களுடன்
மஞ்சள்நீர் கால்வாய் சீரமைத்து ரூ.40 கோடியில் சாலை அமைத்தல்
காஞ்சிபுரம் மாநகராட்சி புதிய கட்டிடம் ரூ.10 கோடி மதிப்பில் அமைத்தல்
அன்னை அஞ்சுகம் திருமண மண்டபம் ரூ.8 கோடி மதிப்பில் புதிய கட்டிடம்
பிள்ளையார்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.1.2 கோடி மதிப்பில் அமைத்தல்
ஆகிய பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்க வருகை தரும்
மாண்புமிகு. கே.என்.நேரு
நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர், கழக முதன்மை செயலாளர்
மாண்புமிகு. தா.மோ.அன்பரசன்
சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சர்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்
க.சுந்தர் B.Sc., M.L.A.
உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர்
காஞ்சிபுரம் தெ.மாவட்ட கழக செயலாளர்
சிறுவேடல் க.செல்வம் M.Com.,M.Phil., LLB., MP.
காஞ்சிபுரம் தெ.மாவட்ட துணை செயலாளர்
காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர்
சி.வி.எம்.பி.எழிலரசன் B.E., B.L., MLA
கழக மாணவர் அணி செயலாளர்
காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர்
அனைவரையும் வருக வருக என அன்போடு வரவேற்கும்...
சி.கே.வி.தமிழ்ச்செல்வன் - காஞ்சிபுரம் மாநகர கழக செயலாளர்
சன்பிராண்டு கே.ஆறுமுகம் - மாவட்ட கழக பொருளாளர்
ர.குமரகுருநாதன் - துணை மேயர்-காஞ்சிபுரம் மாநகராட்சி
கே.திலகர் - 1-பகுதி செயலாளர்
எஸ்.சந்துரு - 2-பகுதி செயலாளர் 2-மண்டலத்தலைவர்
அ.தசரதன் - 3-பகுதி செயலாளர்
சு.வெங்கடேசன் - 4-பகுதி செயலாளர்
அ.யுவராஜ் BCA., B.L. - மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
SKP.சீனிவாசன் - பொதுக்குழு உறுப்பினர்
S.சிகாமணி - பொதுக்குழு உறுப்பினர்
கே.ஏ.செங்குட்டுவன் - மாநகர அவைத்தலைவர்
ஏ.எஸ்.முத்துசெல்வம் - மாநகர துணைச் செயலாளர்
வ.ஜெகன்நாதன் - மாநகர துணைச் செயலாளர்
பி.நிர்மலா M.C - மாநகர து.செயலாளர்
கு.சுப்பராயன் M.C - மாநகர பொருளாளர்
ஜி.சசிகலா - 1வது மண்டலத்தலைவர்
SKP.சாந்திசீனிவாசன் - 3வது மண்டலத்தலைவர்
செவிலிமேடு எஸ்.மோகன் - 4வது மண்டலத்தலைவர்
காஞ்சிபுரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள்
பி.சங்கர் த.விஸ்வநாதன் ப.சுரேஷ் பூங்கொடிதசரதன் இலக்கியாசுகுமார் சித்ராஇராமச்சந்திரன் மு.சங்கர்
எஸ்.அஸ்மாபேகம் எம்.தேவராஜ் சோபனா கண்ணன் சரஸ்வதிபாலமுருகன் கே.குமரவேல் ஆர்.மல்லிகா
எஸ்.சர்மிளா வ.கமலக்கண்ணன் அ.சரவணன் ரமணிபொன்னம்பலம் சாளாசம்பத் எஸ்.அன்பழகன்
ஆர்.கார்த்திக் வி.குமரன் பிரியாகுழந்தைவேலு தி.கௌதமி எஸ்.பானுப்பிரியா வி.சுந்தரி ஆ.கயல்விழி சூசை
அன்புடன் :
மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ் B.E., MBA.,
காஞ்சிபுரம் மாநகராட்சி
கலைஞர் 100 1924 - 2024
நாள் : 06.02.2024 செவ்வாய்கிழமை
நேரம் : மாலை 5.00 மணியளவில்
இடம் : காஞ்சிபுரம்


கலைஞர் 100
1924 - 2024
நாள்: 06.02.2024
செவ்வாய்க்கிழமை
நேரம்: காலை 11 மணி
இடம்:
ராஜா அண்ணாமலை மன்றம்,
ஜார்ஜ் டவுன், சென்னை 1
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் வழங்கப்படும்
❖ நான்கு வகையான திருமண உதவித் திட்டங்களின் கீழ் 551 நபர்களுக்கு 8 கிராம் தங்கம் மற்றும் நிதியுதவி.
❖ முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 142 பேருக்கு புதிதாக வைப்புத் தொகை மற்றும் முதிர்வுத் தொகை.
❖ திருநங்கைகளுக்கு தொழில் தொடங்க 20 பேருக்கு மான்யம்.
❖ சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 18 பேருக்கு தையல் இயந்திரம்
என மொத்தம் 731 நபர்களுக்கு ரூ.5 கோடியே 63 இலட்சத்து, 66 ஆயிரத்து, 301 ரூபாய்க்கு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கிட வருகை தரும்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!
அன்புடன் வரவேற்று மகிழும்: பி. கீதாஜீவன் எம்.காம்.,பி.எட்.,
சமூக நலன் - மகளிர் உரிமை துறை அமைச்சர் - தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர்



செட்டியபட்டியில் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் மூத்த தி.மு.க. நிர்வாகி பவுன்ராஜை நேரில் சந்தித்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் நிதியுதவி வழங்கி ஆறுதல் கூறினார்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு மெய்நிகர் ஒளிப்பதிவுக் கூடம்(Virtual Studio) உள்ளிட்ட 5 தொழில்நுட்பப் படப்பதிவுக் கூடங்களையும், ஒலிப்பதிவுக் கூடத்தையும் திறந்து வைத்து, விரிவுபடுத்தப்பட்ட 14417 தொலை பேசி சேவையினையும் தொடங்கிவைத்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை அரசுச் செயலாளர் குமரகுருபரன், பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் க.அறிவொளி, ஒருங்கிணைத்த பள்ளிக் கல்வித்திட்ட இயக்குநர் திருமதி.ஆர்த்தி, தொடக்கக்கல்வி இயக்குநர் கண்ணப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நெல்லை மாவட்டத்தில்

# வேலைவாய்ப்பு தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலக கட்டிடம்!

## மு.அப்பாவு அடிக்கல் நாட்டினார்! மு.அப்துல் வகாப் - பி.எம்.சரவணன் - கே.ஆர்.ராஜி பங்கேற்பு!

நெல்லை.பிப்.6-

நெல்லை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டல் நிலையம் ஆகிய அலுவலகங்களுக்கு புதிய ஒருங்கிணைந்த கட்டிடம் ரூபாய் 3.05 கோடியில் கட்டுவதற்கான நிகழ்வில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று பாளை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வகாப், மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன்,துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் அடிக்கல் நாட்டினார்.

பாளையங்கோட்டை வட்டம் குலவணிக ர்புரத்தில் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழி

காட்டும் மையம்,ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டல் நிலையம் ஆகிய அலுவலகங்களுக்கு புதிய ஒருங்கிணைப்பு கட்டிடம் ரூபாய் 3.05 கோடி கட்டப்பட உள்ளது.

இதற்கான நிகழ்வில் சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு பங்கேற்று அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.

784 சதுர மீட்டர் பரப்பளவில் தரைத்தளம் மற்றும் 4 தளங்களுடன் கட்டப்படுகிறது.இந்த கட்டிடம் பொதுவான அலுவலக இட வசதியுடன் போட்டி தேர்வு பயிலும் மாணவர்களுக்கு ஸ்மார்ட் போர்டு வசதியுடன் கூடிய வகுப்பறை,அனைத்து போட்டித் தேர்வுக்கான புத்தகங்கள் கொண்ட நூலகம்,மாணவர்கள் படிப்பதற்கான படிக்கும் அறை மற்றும் மாதந்தோறும் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் வைத்து நடத்தப்படும்,சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நடத்துவதற்கான அறை போன்றவற்றுடன் மாணவர்கள் மற்றும் வேலை நாடுநர்கள் எளிதில் அணுகும் வகையில் நெல்லை மாநகரில் கட்டப்படுகிறது.

நிகழ்வில் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மைய உதவி இயக்குனர்கள் மரிய சகாய ஆண்டனி,ஹரிபாஸ்கர் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா நினைவு நாள்!

## மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி தலைமையில் அமைதி ஊர்வலம்!

விழுப்புரம், பிப். 6 -

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் ஆலோசனைப்படி கழகத் துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி வழிகாட்டுதலின்படி விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் பேறறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளையொட்டி விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முகப்பில் இருந்து மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ. தலைமையில் ஊர்வலமாகச் சென்று விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ. புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் தேன்மொழி, நகரச் செயலாளர் இரா. சக்கரை, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கோ. பாஸ்கரன், அப்துல் சலாம், பொதுக்குழு உறுப்பினர் பஞ்ச நாதன், நகர மன்றத் தலைவர் தமிழ்ச் செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக் அலி,

ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, பி.தெய்வ சிகாமணி, தே.முருகவேல், வி.ஜி.பிரபாகரன், பி.வி. ஆர்.விசுவநாதன், ஜெய. இரவிதுரை, வேம்பி இரவி, ஜெ.ஜெயபால், வே. கணேசன், கு.செல்வமணி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஆவின் தலைவர் செ. தினகரன், மாவட்ட தொண்டர் அணி கபாலி, மாணவர் அணி ஸ்ரீ.வினோத், பொறியாளர் அணி புகழ். செல்வகுமார், வழக்கறிஞர் அணி சுவை. சுரேஷ்,

வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன், சிறுபான்மை அணி டி. என். ஏ தமின், தகவல் தொழில்நுட்ப அணி ப. அன்பரசு, தொழிலாளர் அணி கேபிள் சுரேஷ் பாபு, ஆதிதிராவிடர் நலக் குழு அணி செல்வ. பிரேம், கலை, இலக்கிய அணி முத்து கணேசன், இலக்கிய அணி துரை மணிவேலன், நகர நிர்வாகிகள் என். என். இளங்கோ, வி. புருசோத்தமன், நந்தா நெடுஞ்செழியன், சோமு, சக்கரபாணி, ஜமாலுதீன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளையொட்டி தி.மு.க. சார்பில் ஆண்டிபட்டி பேருந்து நிலையம் முன்பு உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ், பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள், கவுன்சிலர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கன்னியாகுமரியில் நாடாளுமன்ற தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு!

# நெல்லை மத்திய மாவட்டத்தினர் கோரிக்கை மனுக்களை வழங்குவீர்!

## மாவட்டச் செயலாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!

நெல்லை.பிப்.6-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.க தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கழக துணை பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தலைமையில் இன்று(06.02.2024 - செவ்வாய்க்கிழமை)காலை 11 மணி அளவில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் கங்கா திருமண மண்டபத்தில் கோரிக்கை மனுக்களை பெறும் நிகழ்வு நடைபெறுகிறது என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

2024ல் நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக தி.மு.க. சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக கழக துணை பொதுச் செயலாளர்,தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி



கருணாநிதி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவினர் இன்று (06.02.2024 - செவ்வாய்க்கிழமை)காலை 11 மணியளவில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் கங்கா திருமண மண்டபத்தில்வைத்து மனுக்களை பெற இருக்கிறார்கள்.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட நாடாளுமன்றத் தொகுதியின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட பல்வேறு தரப்பட்ட தொழில் முனைவோர்கள்,வர்த்தகர்கள், வியாபாரிகள்,விவசாய சங்க நிர்வாகிகள், தொழிற்சங்க நிர்வாகிகள், மீனவ சங்க நிர்வாகிகள்,மாணவர் சங்க நிர்வாகிகள்,அரசு மற்றும் தனியார் ஊழியர்கள், மருத்துவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், கல்வியாளர்கள், பல்துறை வல்லுநர்கள், கழகத் தோழர்கள் என அனைத்து தரப்பு மக்களிடம் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் இடம் பெற வேண்டிய கோரிக்கை குறித்து நேரடியாக சந்தித்து மனுக்களை பெற இருக்கிறார்கள். பொதுமக்கள் அனைவரும் இதனை அழைப்பாக ஏற்று தவறாது கலந்து கொள்ள அழைக்கிறோம்.

வருகை தரும் அனைவரும் தங்கள் கருத்துகளை மனுவாக எழுதிக் கொண்டு வரவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கன்னியாகுமரிக்கு – இன்று

# தி.மு.க. நாடாளுமன்ற தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை!

## தென்காசி மாவட்டத்தினருக்கு வே.ஜெயபாலன் - ஈ.ராஜா வேண்டுகோள்!

தென்காசி.பிப்.6

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி தி.மு.க நாடாளுமன்ற தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு இன்று (06.02.2024) கன்னியாகுமரிக்கு வருகை தருவதால் பொதுநலன்கள் அக்கறை கொண்ட பல்வேறு தரப்பட்ட தொழில் முனைவோர்கள்,வர்த்தகர்கள், வியாபாரிகள்,சமூக ஆர்வலர்கள், கலந்து கொள்ள தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள வேண்டுகோள் அறிக்கையை வருமாறு.

2024 நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக தி.மு.க. சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் தலைவராக கழக துணை பொது செயலாளரும் தூத்துக்குடி





நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். குழுவின் உறுப்பினராக கழக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன்,

கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே. எஸ். விஜயன்,கழக சொத்து பாதுகாப்பு குழு செயலாளர் அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், கழக தகவல் தொழில் நுட் பணி செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா,கழக வர்த்தக அணி துணைத்தலைவர் கோவி.செழியன், கழக மாணவர் அணி செயலாளர் சி.வி. எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.கழக அயலக அணி செயலாளர் எம். எம்.அப்துல்லா எம்.பி.கழக மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல். ஏ.சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ஆகியோர் உள்ளனர்.

இக்குழுவினர் தென்காசி தெற்கு, வடக்கு மாவட்டம் நாடாளுமன்ற தொகுதிக்கு இன்று (06.02. 2024 - செவ்வாய்க்கிழமை) நண்பகல் 12 மணிக்கு கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் தேராகால்புதூர் கங்கா கிராண்டியூர் திருமண மண்டபத்தில் வைத்து கோரிக்கை மனுக்களை பெற இருக்கிறார்கள்.

இந்நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற தொகுதியின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட பல்வேறு தரப்பட்ட தொழில் முனைவோர்கள், வர்த்தகர்கள், வியாபாரிகள், விவசாயிகள், மருத்துவர்கள், மீனவர்கள், மாணவர் சங்கங்கள், தொழிலாளர் நலப் பிரிவு பிரநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாது கலந்து கொள்ள அழைக்கின்றோம்.

வருகை தரும் அனைவரும் தங்கள் கருத்துகளை மனுவாக எழுதிக் கொண்டு வரவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு தினம் வாடிப்பட்டியில் நடைபெற்றதில் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், மு.பால்பாண்டியன், பால ராஜேந்திரன், புதூர் சேகர், ரோகிணி பொம்மதேவன், தன்ராஜ், பசும்பொன்மாறன், பொதும்பு தனசேகர், மேலூர் முகமது யாசின், மருது பாண்டியன், கௌரி சங்கர், சசிகுமார், ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், ரகுபதி, சத்யபிரகாஷ்,ஜெயராமன், பிரகாஷ், ஜெயகாந்தன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.

### திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட பஷீர் அகமது அவர்கள் மறைவெய்திய காரணத்தால்;

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2024, பிப்ரவரி 9 (வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில்** அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்/ஒன்றிய/நகர/பகுதிச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 05.02.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஜோலார்பேட்டை நா. மணி**
**பிப்ரவரி 6 (2013)**



**வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை பேரூர் செயலாளர் மற்றும் நகரச் செயலாளராக 31 ஆண்டுகள் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.**

**பேரூராட்சித் தலைவராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் நலப் பணிகளை மேற்கொண்டார்.**

**கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




2024 மக்களவை தேர்தலையொட்டி, தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் முன்னாள் எம்.பி. டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், அரசு தலைமைக் கொறடா கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன், எழிலன் நாகநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஆர். என்.ராஜேஸ்குமார், எம்.எம்.அப்துல்லா, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ஆகிய 11 பேர் கொண்ட குழுவினர் தூத்துக்குடி, விருதுநகர், ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த தொழில் முனைவோர்கள், வர்த்தகர்கள், வியாபாரிகள், விவசாயிகள், மருத்துவர்கள், மீனவர்கள், மாணவர் சங்கங்கள், சமூக ஆர்வலர்கள், உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் கருத்துக்களை நேரடியாக கேட்டு மனுக்களாகப் பெற்றனர். அமைச்சர்கள் கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், செஞ்சி மஸ்தான், மேயர் ஜெகன் பெரியசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் சண்முகையா, மார்கண்டேயன் உள்ளிட்ட ஏராளமானோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### சோ.தர்மன் - டி.பி.எம்.மைதீன்கான் முன்னிலையில்

# 7வது பொருநை நெல்லை புத்தகத் திருவிழா!

## சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்து சிறப்புரை!

நெல்லை, பிப். 6 -

நெல்லை மாநகராட்சி எதிரில் உள்ள மாநகராட்சி வர்த்தக மையத்தில் (பொருட்காட்சி திடல்) மாவட்ட நிர்வாகம், பள்ளிக்கல்வித்துறை, பொது நூலக இயக்கம் மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் (பபாசி) இணைந்து நடத்தும் 7வது பொருநை நெல்லை புத்தகத் திருவிழா சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் சாகித்ய அகாடமி விருதாளர் சோ.தர்மன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான், பாளை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வஹாப், மாநகராட்சி மேயர் சரவணன், ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், துணை மேயர் ராஜு,

மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெகதீஸ், மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த புத்தகக் கண்காட்சி 3.2.2024 முதல் 13.2.2024 வரை அதாவது 11 நாட்கள் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் புத்தகக் கண்காட்சியை துவக்கி வைத்து சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் புத்தகங்கள் வாசிப்பதற்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்தார்கள். தந்தை பெரியார், காமராஜர் பேரறிஞர் அண்ணா, கலைஞர் அவர்கள் நமது முதலமைச்சர் அவர்கள் ஆகியோர் முன்னெடுத்த முயற்சியால் பல பெண்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். பெண் கல்விக்காக அயராது பாடுபட்ட தலைவர்கள் இவர்கள். நமக்கு விஞ்ஞான வளர்ச்சி எளிதாக கிடைக்கவில்லை. உங்களைப் போன்று படிக்கின்ற காலத்தில் நன்றாக புரிந்து படித்து விஞ்ஞானியாக உருவாகி பல விஞ்ஞான வளர்ச்சியை நமக்கு வழங்கி இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் விஞ்ஞானிகள் அதிகமானவர்கள் உள்ளார்கள். விஞ்ஞான வளர்ச்சிக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அதிகமாக உதவியுள்ளார்கள். விஞ்ஞானிகள் பெரிய அளவிற்கு வருவதற்கு காரணமே அவர்கள் புத்தகத்தை படித்ததன் காரணமாகும். அதனால் படிக்கின்ற மாணவ, மாணவியர்கள் நாம் அனைவரும் புத்தகம் வாசிப்பதை பழக்க, வழக்கத்திற்கு கொண்டுவர வேண்டும்.

படிக்கின்ற மாணவ, மாணவியர்கள் வாழ்வில் பெரிய உயர் பதவிகளை அடைய வேண்டும் என்பதற்காகவே ஆண்டுதோறும் புத்தக திருவிழாவினை நடத்த முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். எழுத்தாளர்களையும், படைப்பாளிகளையும், ஊக்கப்படுத்தியதே பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் தான். அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள், முதன்முதலாக புத்தகத் திருவிழாவினை ஆரம்பித்து மிக சிறப்பாக மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்த பெருமை அவர்களுக்கு உண்டு. அந்த அமைப்பு பபாசி அமைப்பு. இந்த புத்தகத் திருவிழா வினை தொடங்குவதற்கு உறுதுணையாக இருந்த அந்த அமைப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகின் முதன்முதலாக ஜெர்மனியில் புத்தகத் திருவிழா தொடங்கி நடைபெற்றது. அதனால் தான் ஜெர்மனி மிகப்பெரிய வளர்ச்சியை எட்டியுள்ளது. உலகின் பெரிய புத்தக கண்காட்சி உள்ள இடம் ஜெர்மன், 2வது இடம் லண்டன், 3வது இடம் இந்தியாவில் உள்ள மேற்கு வங்காளமாகும். தொடர்ந்து 47 ஆண்டு காலம் புத்தக கண்காட்சி நடைபெற்று கொண்டிருப்பதனால் தான், நமது மாணவ, மாணவிகள் நன்றாக படிக்க வைக்கிறது சிந்திக்க வைக்கிறது, எழுத வைக்கிறது, எழுத்தாளர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் ஆகியோர்களுக்கு தமிழ்நாடு அரசும், ஒன்றிய அரசும் பல விருதுகளை கொடுத்துள்ளது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சி காலத்தில் தான் எழுத்தாளர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் ஆகியோர்களுக்கு விருது வழங்கி கௌரவித்தார்கள்.

கடந்த காலங்களில் கலைஞர்கள் மற்றும் படைப்பாளிகளுக்கு பெரிய அளவில் அங்கீகாரம் வழங்கப்படவில்லை. தற்போது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டில் உள்ள எழுத்தாளர்கள், படைப்பாளிகள், கலைஞர்களை கண்டறிந்து அவர்களுடைய நிலையை ஆராய்ந்து, படைப்பாளிகள் எழுதிய புத்தகங்களை தமிழ்நாடு அரசு பெற்றுக் கொண்டு நூலகங்களுக்கு வழங்கி நிதி உதவி செய்து சிறப்பு சேர்த்துள்ளது. படைப்பாளிகளுக்கும், எழுத்தாளர்களுக்கும் தமிழ்நாடு அரசு பெருமை சேர்த்துள்ளது.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சுரேஷ், மகளிர் திட்ட அலுவலர் இலக்குமனன், பதிப்பாளர்கள் சங்கம் (பபாசி) ஒருங்கிணைப்பாளர் பாலாஜி, மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா பொதுக்குழு உறுப்பினர் பரமசிவம்ஐயப்பன், ஒன்றிய செயலாளர்கள் ஜோசப்பெல்சி, ராஜன், மாமன்ற உறுப்பினர் உலகநாதன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான்மைதீன், மாவட்ட நூலகர் மீனாட்சிசுந்தரம், உள்பட மாணவ, மாணவியர்கள், இலக்கியவாதிகள் புத்தக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் நெல்லை வட்டாட்சியர் ஜெயலட்சுமி நன்றி உரையாற்றினார்.

### திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

# திண்டுக்கல் வடக்கு - திண்டுக்கல் தெற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், திண்டுக்கல் வடக்கு மற்றும் திண்டுக்கல் தெற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்ட நிலையில், அவ்வொன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திண்டுக்கல் வடக்கு மற்றும் திண்டுக்கல் தெற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திண்டுக்கல் வடக்கு ஒன்றியம்**

**பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :**
1. எஸ்.வி. பழனிச்சாமி, அனுமந்தநகர் பாலகிருஷ்ணாபுரம் அஞ்சல்.
2. எம்.காளிதாஸ், நாகம்பட்டி, தாமரைப்பாடி அஞ்சல்.
3. சி. சுரேஷ்குமார், அணைப்பட்டி, கொட்டப்பட்டி அஞ்சல்,
4. ஜி.சுந்தரவள்ளி, பில்லமநாயக்கன்பட்டி, பெரியகோட்டை அஞ்சல்.
5. டி.பொன்ராமன், ராஜகாளியம்மன் நகர், சீலப்பாடி அஞ்சல்.
6. இரா. கதிரேசன், தூங்கணம்பட்டி, முள்ளிப்பாடி அஞ்சல்.
7. எஸ்.சையது அப்துல்ரகுமான், எம்.எம்.கோவிலூர் & அஞ்சல்.

**திண்டுக்கல் தெற்கு ஒன்றியம்**

**பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :**
1. பா.குருசாமி, நாயுடு தெரு, கொட்டபட்டி, பள்ளபட்டி அஞ்சல்.
2. கோ.ராதாகிருஷ்ணன், ஆர்.எம்.டி.சி.காலனி, ரெட்டியபட்டி அஞ்சல்.
3. கே.சுப்புலெட்சுமி, 7ஏ, அருணாச்சலம் நகர், முடுக்குராஜாக்காபட்டி
4. பு. புருஷோத்தமன், மேற்குமீனாட்சிநாயக்கன்பட்டி, குரும்பபட்டி அஞ்சல்
5. அ. அலெக்ஸ், 9/174, மேற்கு தெரு, அ.வெள்ளோடு.
6. சி. ஜெயராமன், நல்லாம்பட்டிதெற்கு தெரு, அடியனூத்து அஞ்சல்.
7. க.செந்தில்குமார், மேட்டூர் காலனி, தோட்டனூத்து அஞ்சல்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 05.02.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



ஒன்றிய பெருந்தலைவர் ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பாங்கை ஜி.சொக்கலிங்கம் முன்னிலையில் நொளம்பூர் ஊராட்சியை சேர்ந்த வழக்கறிஞர் சிகாமணி தலைமையில் மாற்றுக் கட்சியினர் சுமார் 100 பேர் தி.மு.க.வில் இணைந்தனர் . உடன் திருமதி.பி.சீத்தாபதி சொக்கலிங்கம் (தமிழ்நாடு மகளிர் ஆணைய குழு உறுப்பினர் திண்டிவனம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்) ஒலக்கூர் ஒன்றிய அவைத் தலைவர் வி.புருஷோத்தம்மன் ஜி.எஸ்.செந்தில்முருகன் (மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர்) தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் யோகி பாலாஜி மற்றும் கழகத்தினர் உடன் இருந்தனர்.

# திராவிட இயக்கத்தின் வெற்றி நாயகன்!



திராவிட உதயத்தின் ஆற்றலில் நிரம்பும் - கொள்கையினை
பாரெங்கும் நிறைத்து சேர்க்கும் தீரரே!
காலத்தின் காவலனாய் தெற்கிலிருந்து உதிக்கும் - சூரியனே!
அரியாசனத்தின் கடமையே! அறிவாலயத்து கண்ணியமே!
உம்கால் தொடும் வழியெல்லாம் நெறியின்
திராவிடச் சிந்தனை வளர்க்கும் போர்க்குரலே!
மடை திறந்த காட்டாற்றில் எதிரிகள் - பிடரியிட
மக்கள் வெள்ளம் அரவணைக்கும் ஆதரவு கொண்டீரே!
காலந்தரும் பொறுப்புகளின் திறன்நிறைந்த மகுடமே!
தமிழகத்து உரிமை காக்கும் திராவிடச் - சுடரே!
ஒன்றிய ஆளுமையின் அரசியல் சாசனமே!
கழகத்து மாட்சிமையே வாழ்க! வெல்க!!

1980ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் நாள் மதுரை ஜான்சிராணி பூங்காவில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் இளைஞரணி துவங்கப்பட்டது. கழகத் தலைவர் - முதல்வர் தளபதி அவர்கள் கழக இளைஞரணிச் செயலாளராக பொறுப்பேற்ற அன்று முதல் கிராமம் எங்கும் கழகக் கொடியை ஏற்றியும், தமிழகத்தில் திராவிட சிந்தனைமிக்க இளைஞர்களை ஒருங்கிணைத்து இளைஞர் அணியையும், கழகத்தையும் வலுப்படுத்தினார். திராவிட கொள்கைகளை பாசறைக் கூட்டங்கள் மூலம் தொண்டர்களுக்கும் கழக உடன்பிறப்புகளுக்கும் உத்வேகம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு முழுமையும் பயணம் செய்தார் கழகத் தலைவர் - முதல்வர் அவர்கள்.

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி"

மழையின் செம்மையை எதிர்பார்த்து உலகத்து உயிர்கள் எல்லாம் வாழ்வதைப் போல மன்னனின் செங்கோன்மையை எதிர் நோக்கி வாழ்வார்கள் எனும் வள்ளுவனின் கூற்றுக்கு இணங்க தமிழக இளைஞர்களின் நாடித்துடிப்பாய் திராவிட கொள்கை வேர் தழைத்திட 2019ம் ஆண்டு ஜூலை மாதம் கழக இளைஞர் அணிச் செயலாளராக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றார். இளைஞர் அணியின் செயலாளராக பணிப் பொறுப்பை ஏற்றதும் இளைஞர் அணியில் 30 லட்சம் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க இலக்கு நிர்ணயம் செய்து அதற்கான பணியையும் வெற்றிகரமாகச் செயல்படுத்தினார்.

கழகத் தலைவர் தலைமையில் இளைஞரணியின் முதல் மாநில மாநாடு 2007 ஆம் ஆண்டு நெல்லையில் எழுச்சிமிகு மாநாடாக தமிழக அரசியலில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அந்த வகையில் கழக இளைஞரணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைந்த இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு இந்திய ஒன்றியத்தின் பாசிச கூடாரங்களை கிழித்தெரியும் திராவிட சித்தாந்தம் நிறைந்த மதச்சார்பற்ற இளைஞர் படையின் தளபதியாய் இளைஞரணியின் இராண்டவது மாநில மாநாட்டை வெற்றிக்கு உரித்தாக்கிருக்கிறார்.

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு"

செயலை செய்வதற்கு வேண்டிய கருவிகளையும் ஏற்ற காலத்தையும் செய்யும் வகையையும் செயலின் அருமையும் நன்கு சிந்திப்பவனையே சிறந்த தலைவனாக உலகு போற்றும். அந்த வகையில்,

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களால் இளைஞரணி செயலாளர் அவர்கள் தலைமையில் மாநாடு தேதி அறிவிக்கப்பட்ட நாள் துவங்கி மாநாட்டுப் பணிகளை பல்வேறு கட்டங்களாக நிர்வகிக்க நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களை ஒருங்கிணைப்பாளராக கொண்டு சேலம் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி ஆகியோரின் முன்னிலையில் மாவட்டக் கழக, ஒன்றியக் கழக, பேரூர்க் கழக, கிளைக் கழக, இளைஞரணி மற்றும் சார்பு அணி நிர்வாகிகளுக்கு ஆலோசனை கூட்டம் மூலம் அறிவுறுத்தப்பட்டு சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் ஆகஸ்ட் 23 ஆம் தேதி மாநாட்டின் கால்கோள் விழா துவங்கியது முதல், மாநாட்டு வேலைகள் நிர்வாகக் குழு முன்னிலையில் மும்முரமாக நடைபெற்றது.



**மருத்துவர் ஆ.கா.தருண்**
மாநில துணைச்செயலாளர்,
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி.

தமிழகம் முழுமையும் அமைச்சர் பெருமக்களும், மாவட்டச் செயளாலர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கழக இளைஞரணியின் மாநாட்டுத் திடலில் பார்வையிட்டும் ஆலோசனைகளையும் வழங்கினர். இருந்த பொழுதும் அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் அவர்கள் செப்டம்பர் 27ஆம் தேதி நேரில் ஆய்வு மேற்கொண்டு கழக நிர்வாகிகளை துரிதப்படுத்தினார். நவம்பர் 3ஆம் தேதி மாநில மாநாட்டுத் திடலில் நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களால் கழக அலுவலகம் அமைக்கப்பட்டு இரவு பகலாக அமைச்சர் பெரு மக்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள் அறிவுறுத்துதலின் படி இளைஞர் அணி மாநில துணை செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளார்கள் உள்ளிட்ட துடிப்புமிக்க இளைஞர் பட்டாளமும் அணி திரண்டு கழக இளைஞரணிச் செயலாளர் தலைமை ஏற்கும் மாநாட்டின் வேலைகள் தீவிரமாயின.

மாநாட்டுப் பணிகளை ஒருங்கிணைக்க நிதிக்குழு, மேடை நிர்வாகக் குழு, வரவேற்புக்குழு ,சமூக வலைத்தளக்குழு, அலங்காரக்குழு, மருத்துவ குழு என 23 குழுவினரும் ஓய்வறியாது ஆற்றிய உழைப்பின் பலனானது நம் மாநாட்டை முழுமையடையச் செய்தது.

தந்தை பெரியார் நுழைவு வாயில், பேரறிஞர் அண்ணா திடல், முத்தமிழறிஞர் கலைஞர் மேடை, இனமானப் பேராசிரியர் அரங்கம், சேலத்து சிற்பி ஐயா வீரபாண்டியார் கொடிமேடை, கழக முன்னோடிகள் வீரபாண்டி ஆ.செழியன், வீரபாண்டி ஆ.ராஜா, சந்திரசேகரன் ஆகியோருடன் நீட் எதிர்ப்பு போராளிகளான தங்கை அனிதா மற்றும் தம்பி தனுஷ் பெயரில் நுழைவு தோரண வாயில்கள் அமைத்தும். முரசொலி புத்தக நிலையம் மற்றும் அன்பகம் வரலாற்று கண்காட்சியும் அமைக்கப்பட்டு மேலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளும் நிறுவப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

தி.மு.கழக இளைஞர் அணியின் மாநாட்டுப் பந்தலை 9 லட்சம் சதுர அடி பரப்பளவில் உருவாக்கி இந்திய நாட்டின் வரலாற்றில் சாதனை மாநாடாக நம் இளைஞரணியின் இரண்டாம் மாநில மாநாடு அமைந்திருந்தது.

மாநாட்டிற்கு முதல் நாள் நிகழ்ச்சிகளே மாநாட்டின் பெரு வெற்றியை நாடெங்கும் முன்னறிவிப்பு செய்கின்ற வகையில் நடைபெற்றன.

சென்னை - அண்ணா சாலையில் தந்தை பெரியார் திருவுருவச் சிலை முன்பு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர், கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட மாநாட்டுச் சுடர், செங்கல்பட்டு - விழுப்புரம் - கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் தாண்டி மாநாட்டுத்திடலுக்கு வந்து சேர்ந்தது. இளைஞரணி துணைச் செயலாளர்கள் கழக இளைஞரணி செயலாளர் அவர்களிடம் வழங்க, அதனை கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களில் ஒப்படைத்து - பின்னர் அந்தச் சுடரை, மாநாட்டில் அமைக்கப்பட்டிருந்த மாநாட்டு ஒளிச்சுடர் மேடையில் ஏற்றி மாநாட்டின் வெற்றி நிகழ்வை உறுதிபட இளைஞர் படையின் ஆரவாரத்திற்கிடையே இந்திய நாட்டிற்கு பறைசாற்றினார். மேலும் எல்லாவற்றுக்கும் அணி சேர்த்து வைத்தது போல் தி.மு.க. டைரடர்ஸ்சின் தமிழ்நாடு தழுவிய பிரச்சாரப் பயணம் இளைஞர்கள் மத்தியில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தி ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் தி.மு.க. டைரடர்ஸ்சின் இருசக்கர வாகன அணி வகுப்பு நடந்தது "மாநில உரிமைகள் மீட்பு" என்னும் நமது நோக்கத்தை தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சேர்த்த 250 இருசக்கர வாகனங்களில் குமரி முனையில் உள்ள உலக பொதுமறையாளர் திருவள்ளுவர் சிலை அமைவிடத்தில் இருந்து புறப்பட்டு தமிழ்நாடு முழுவதும் சுற்றி இறுதியில் மாநாட்டின் திடலுக்கு வந்து சேரும் போது சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்களாக திராவிட சிந்தனைகளை, திராவிட மாடல் ஆட்சியின் கொள்கைகளை மாநாட்டின் முதற்கட்ட வெற்றி முழக்கமாக கழக தலைவர் அவர்களின் முன்பாக அணிவகுத்துச் சென்ற காட்சி நம் கண்களில் தேங்கி நிற்கிறது.

இருள் வானத்தைத் திரையாக்கி அதில் திராவிட தலைவர்களை தூரிகையாகி ட்ரோன்களைக் கொண்டு வரலாற்றிலேயே ஒரு புதிய நவீன நிகழ்ச்சியாக நம் மாநாட்டிற்கு முந்தைய நாள் நடைபெற்றது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர், நம் தாய்த்தமிழ்நாடு, இளைஞரணியின் இலட்சியத்தில் ஒன்றான ஒற்றைச் செங்கலைத் தாங்கிய இளைஞரணி செயலாளர் உருவம், உயிருக்கும் கழக உடன் பிறப்பிற்புகளுக்கும் நிகரான உதயசூரியன் சின்னம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் "தமிழ் வெல்லும்" வாசகம் என வானில் நட்சத்திரங்களுக்குப் போட்டியாக ட்ரோன்கள் மின்னி மிளிர்ந்தது

மாநில மாநாட்டின் விடியற் பொழுதே பாசிசம் விலகி திராவிடச் சூரியன் முளைத்த கடல் இல்லா சேலத்தில் கழக இளைஞரணியினரின் தலைகளே கடலாக, அசைந்தாடிய கருப்பு சிவப்பு இருவண்ணக்கொடிகளே அலைகளாக இருந்ததைக் கண்டு இந்திய ஒன்றியமே வியந்தது அறிவோம். இத்திசை நோக்கிய சேலத்தில் தான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தி.மு.க.வின் மாநில மாநாட்டில் 1997ஆம் ஆண்டு நமது கழகத்தின் கொடியை ஏற்றினார்கள். அதேபோல் 2004ஆம் ஆண்டு சேலத்து சிற்பி வீரபாண்டியார் நடத்திய மாநாட்டில் நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் மாநாட்டுக் கொடியை ஏற்றினார்கள். அந்த வரிசையில் கழக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அக்கா கனிமொழி அவர்கள் கழகத்தின் கம்பீரக் கொடியினை சேலத்துச் சிற்பி வீரபாண்டியார் நினைவுக் கொடி மேடையில் ஏற்றி வைத்தார்கள். மாநாட்டுக் கொடி தெரிந்த தூரமெங்கும் கழக இருவண்ணக் கொடியை ஏந்திய லட்சோப லட்ச இளைஞர் கடலாய் சேலம் மாறியது. பல மைல் தூரங்களுக்கு அணிவகுத்தது வாகனங்கள். எத்துணை ஆழ்கடலும் அளக்கும் அளவிற்கு இளைஞரணிச் தம்பிமார்கள் மாநாட்டுத் திடலில் கரைபுரண்ட பொழுதும் கழக இளைஞரணி செயலாளர் அவர்களுக்கு பெருமிதம் ஈன்று தரும் வகையில் கழக முழக்கமான கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் அமைந்திருந்தனர். மாநாட்டு காற்பந்தல் முதல் முத்தமிழறிஞர் மாநாட்டு மேடை வரையிலும் இளைஞரணி தம்பிமார்களே முழுவதுமாக நிறைந்த மாநாடு என்றால், அது இந்தியாவிலேயே நம் தி.மு.கழக இளைஞரணி செயலாளர் தலைமையேற்ற இச்சேலத்து இளைஞர் அணி மாநாடு என்று சொன்னால் அது மிகையாகாது.

மாநாட்டில் கழக துணை பொதுச்செயலாளர்களாலும் முதன்மை கழக நிர்வாகிகளாலும் பல்வேறு தலைப்புகளில் நிகழ்த்தப் பட்ட உரைகள் அனைத்தும் திராவிட மாடல் கொள்கையின் ஆதாரங்களாக இருந்தன. நேரத்தின் நெருக்கடியிலும் திராவிட மாடல் கொள்கையினையும், சித்தாந்தத்தையும் திராவிட இயக்கத்திற்கே உரியக்கொள்கையின் வீர முழக்கம் அரங்கம் எங்கும் எதிரொலித்து இருக்கையின் நுனி நழுவாமல் கேட்போர் செஞ்சமெல்லாம் கசிந்துருக அமைந்திருந்தது. இயக்கத்தின் விரல் பழகும் இளைஞர்களின் உணர்ச்சிடோடு கலந்திட்ட வகையில் கழக முன்னோடிகளின் திராவிட இயக்க தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரின் சீரிய சுயமாரியாதை சிந்தனை, மதநல்லிணக்க உணர்வு, பெண்விடுதலை, இந்தி திணிப்பு, பாசிச ஆத்திக்கம் போன்ற உயரிய கருத்துக்கள் இளைஞர்களின் மனதில், உணர்வில், உயிரில் ரீங்காரமிடும் அளவிற்கு அமைச்சர்கள் - சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் திராவிட இயக்கப் பேச்சாளர்களிடம் சமத்துவம், சமூகநீதி, சமதர்மம் ஆகிய திராவிட கோட்பாட்டின் எழுச்சியுரை அமைந்திருந்தது.

திராவிட இயக்க தீர்மானங்களே சட்டங்களாகும் வகையில் நமது மாநாட்டுத் தீர்மானங்கள் அத்துணையும் ஒன்றிய அரசின் ஆதிக்கத்தை தாக்கும் கொள்கை முரசுகளாக அமைந்திருந்தது.

நமது மாநாட்டின் நோக்கம் "மாநில உரிமை மீட்பு" அந்த வகையில் "நீட் விலக்கு நமது இலக்கு" என்ற கொள்கையின் கீழ் களத்திலும், இணைதளத்திலும் பெற்ற கையொப்பங்களை மாநாட்டு மேடையில் கழகத் தலைவர் கரங்களில் சேர்த்தார் கழக இளைஞரணி செயலாளர் அவர்கள். மேலும் "எல்லாருக்கும் எல்லாம்" எனும் "திராவிட தத்துவம்" இந்தியா முழுவதும் நிறைகின்ற வகையில் அயராது உழைக்க இளைஞரணி மாநாடு உத்வேகம் தந்திருக்கிறது. வெல்லப்போவது சமூக நீதியும், சமத்துவமுமே என்பதை கழக இளைஞர் அணி மாநில மாநாடு நமக்கு கோடிட்டு காட்டியிருக்கிறது.

நமது இளைஞர் அணியின் இராண்டாவது மாநில மாநாட்டை வெற்றிக்கு உரித்தாக்கிய கழக முதன்மை செயலாளர், மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர,கிளை கழக நிர்வாகிகளும் கழக உடன் பிறப்புகளும் ஆற்றிய பணி மாநாட்டின் வெற்றிக்கு இன்றியமையாததாக அமைந்தமைக்கு கணையாழி அணிவித்து மரியாதை செலுத்தினார், கழக இளைஞரணி செயலாளர் அவர்கள்.

"மன்னர் விழைய விழையாமை மன்னரான்
மன்னிய ஆக்கம் தரும்"

வேந்தன் விரும்பும் பொருள்களுக்கு தானும் விரும்பாதிருக்கும் தன்மையானது அவ்வேதந்தனாலே நிலைத்திருக்கும் செல்வங்களை தருவது விளங்கும்

எனும் குறளின் தன்மையைப் போல சமூகநீதிக் கொள்கையின் வழியில் பயணிக்கும் திராவிட சிந்தனையின் பால் மதசார்பற்ற மண்தான் தமிழ்நாடு என்பதை சேலத்தில் எழுச்சியுடன் நடந்தேறிய கழக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் உணர்த்தியிருக்கிறது.

நாடும் நமதே, நாற்பதும் நமதே.

"இந்தியா" கூட்டணி வென்று, கலைஞரின் முழக்கமான "மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி" என்பது இந்தியாவின் முழக்கமாகும்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி கிழக்கு ஒன்றியம், அப்பம்பட்டில் நேற்று இரவு நடைபெற்ற செஞ்சி தொகுதி தி.மு.க. மாணவரணி சார்பில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் மாநில சுற்றுச்சூழல் அணித் தலைவர் பூங்கோதை ஆலடி அருணா சிறப்புரையாற்றினார். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் உள்ளனர்.

## 2022 - 23 ஆம் ஆண்டில் வெளி நாடுகளிலிருந்து

# இறக்குமதி செய்யப்பட்ட உரம் எவ்வளவு?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி !



புதுடெல்லி, பிப். 6 -

கடந்த 2022-23 ஆம் ஆண்டில் இந்தியா, சீனா உட்பட வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்த உரம் அளவு/மதிப்பு குறித்தும் மாநிலம் வாரியாக வழங்கப்பட்ட உர மானியம் குறித்தும் நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து மக்களவையில் அவர் மேலும் எழுப்பிய கேள்வி வருமாறு :-

2022-23 ஆம் ஆண்டில் இந்தியாவின் உர இறக்குமதியானது 18 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும் (ரூ.1,49,399 கோடியே19 இலட்சம்), சீனாவில் இருந்து மட்டும் சுமார் 3 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும் (ரூ24,899 கோடியே 86 இலட்சத்து 50 ஆயிரம்) உள்ளது என்பது உண்மையா? அப்படியானால், அதன் விவரங்கள் யாவை? 2030 ஆம் ஆண்டிற்குள் உரங்களின் தேவை மற்றும் விநியோகத்தில் தன்னிறைவு அடைய அரசா ங் கத்தால் எடுக்கப்பட்ட / முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

ஒவ்வொரு ஆண்டும் உர மானியமாக 80,000 கோடி வழங்கப்படுகிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் உரங்களின் தற்போதைய விலையுடன், நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு மாநிலம்/யூனியன் பிரதேச வாரியாக வழங்கப்படும் மானியம் என்ன?

இதற்கு ஒன்றிய அரசின் இரசாயனங்கள் மற்றும் உரங்களுக்கான ராஜாங்க அமைச்சர் பக்வந்த் குபா எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு :-

யூரியா உற்பத்தி மற்றும் தேவைக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க, உரங்கள் துறை மூலம் இந்திய அரசு யூரியாவை விவசாயப் பயன்பாட்டுக்காக அரசாங்கக் கணக்கில் இறக்குமதி செய்கிறது. 2022-23 ஆம் ஆண்டில் யூரியாவின் இறக்குமதி மற்றும் அதன் மதிப்பு பில்லியன் அமெரிக்க டாலரில் பின்வருமாறு :-

2022-23இல் இந்திய அரசு வெளிநாடுகளில் 4.751 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அதாவது 39,433 கோடியே 8 இலட்சத்து 62 ஆயிரத்து ஐம்பது ரூபாய் மதிப்புள்ள 75.80 லட்சம் மெட்ரிக் டன் யூரியா இறக்குமதி செய்துள்ளது.

2022-23ல் சீனாவில் இருந்து 0.831 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புள்ள அதாவது 6ஆயிரத்து 897 கோடியே 26 இலட்சத்து 26 ஆயிரத்து ஐம்பது ரூபாய் மதிப்புள்ள 12.80 லட்சம் மெட்ரிக் டன் யூரியா இறக்குமதி செய்துள்ளது.

இது தவிர பாஸ்பேடிக்&பொட்டாசியம் (P&K) உரங்களைப் பொறுத்த வரையில், இந்த வகை உரங்கள் ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டத்தின் (NBS) கீழ் திறந்த பொது உரிமத்தின் (OGL) கீழ் உள்ளன. அவை வணிக ரீதியாக சாத்தியமான விதிமுறைகளின் அடிப்படையில் பல்வேறு தனியார் நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்படுகின்றன. இறக்குமதி செய்யப்பட்ட பாஸ்பேடிக்&பொட்டாசியம் உரங்களின் மதிப்பு எவ்வளவு என்பது அரசாங்க கணக்கில் பராமரிக்கப்படவில்லை. இருப்பினும், 2022-23ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பாஸ்பேடிக்&பொட்டாசியம் உரங்களின் அளவு கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

2022-23ல் வெளிநாடுகளில் இருந்து 112.01 இலட்சம் மெட்ரிக் டன் பாஸ்பேடிக்&பொட்டாசியம் இறக்குமதி செய்யப்பட்டது. இதில் சீனாவில் இருந்து 13 இலட்சம் மெட்ரிக் டன் பாஸ்பேடிக்&பொட்டாசியம் இறக்குமதி செய்யப்பட்டது.

### யூரியா உர உற்பத்தி!

யூரியா உர உற்பத்தி துறையில் புதிய முதலீட்டை எளிதாக்குவதற்கும் யூரியா உர உற்பத்தி துறையில் இந்தியாவை தன்னிறைவு அடையச் செய்வதற்கும் ஒன்றிய அரசு புதிய முதலீட்டுக் கொள்கை 2012ஐ ஜனவரி 2, 2013 அன்று அறிவித்தது மற்றும் அதன் திருத்தம், அக்டோபர் 7, 2014 அன்று அறிவித்தது.

NIP 2012 இன் கீழ் மொத்தம் 6 புதிய யூரியா அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை Matixஉரங்கள் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் (Matix) இன் பனகர் யூரியா அலகு; சம்பல் உரங்கள் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் (CFCL) இன் கடேபன்-III யூரியா அலகு; ராமகுண்டம் உரங்கள் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் (RFCL)ன் ராமகுண்டம் யூரியா யூனிட்; மற்றும் ஹிந்துஸ்தான் உர்வரக்&ரசயான் லிமிடெட்டின் (HURL) கோரக்பூர், சிந்த்ரி மற்றும் பரௌனி ஆகிய 3 யூரியா அலகுகள் ஆகும். இந்த யூனிட்கள் ஒவ்வொன்றும் ஆண்டுக்கு 12.7 லட்சம் மெட்ரிக் டன் யூரியா உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளன.

எனவே, இந்த யூனிட்கள் இணைந்து ஆண்டுக்கு 76.2 லட்சம் மெட்ரிக் டன் அளவில் நாட்டின் தற்போதைய உள்நாட்டு யூரியா உற்பத்தி திறனில் சேர்த்துள்ளன, மேலும், நிலக்கரி வாயுப் பாதையில் ஆண்டுக்கு 12.7 லட்சம் மெட்ரிக் டன் என்ற புதிய கிரீன்ஃபீல்ட் யூரியா ஆலையை அமைப்பதன் மூலம் எஃப்சிஐஎல்-ன் டால்ச்சர் யூனிட்டின் மறுமலர்ச்சிக்கான பிரத்யேக கொள்கை 28 ஏப்ரல் 2021 அன்று அறிவிக்கப்பட்டது.

உள்நாட்டு யூரியா உற்பத்தியை அதிகப்படுத்தும் நோக்கங்களில் ஒன்றான புதிய யூரியா கொள்கை (NUP) 2015ஐ 2015 மே 25 அன்று அரசாங்கம் அறிவித்துள்ளது. NUP-2015 யூரியாவின் உற்பத்தியை 2014-15 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூடுதல் உற்பத்திக்கு வழிவகுத்தது.

### இந்துஸ்தான் உரக் கழகம் பரிந்துரை!

நாட்டில் உள்நாட்டு யூரியா உற்பத்தியை அதிகரிப்பதற்காக, இந்திய உரக் கழகம் (FCIL) மற்றும் பராவ்னி (பீகார்), ராமகுண்டம் (தெலுங்கானா), கோரக்பூர் (உத்தரப் பிரதேசம்), சிந்திரி (ஜார்கண்ட்) மற்றும் தல்ச்சர் (ஒடிசா) ஆகியவற்றின் யூனிட்களை புதுப்பிக்க இந்திய அரசு கட்டாயப்படுத்தியது.

இந்துஸ்தான் உரக் கழகம் லிமிடெட் (HFCL) இன் யூனிட் (HFCL) பரிந்துரைக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் கூட்டு முயற்சி நிறுவனம் (JVC) மூலம் ஆண்டுக்கு 12.7 லட்சம் மெட்ரிக் டன் திறன் கொண்ட புதிய அம்மோனியா-யூரியா ஆலைகளை அமைப்பதற்காகவும் ராமகுண்டம் மற்றும் கோரக்பூர் யூனிட்கள் முறையே 22.03.2021 மற்றும் 07.12.2021 ஆகிய தேதிகளில் இயக்கப்பட்டன. மேலும், பாரௌனி மற்றும் சிந்த்ரி யூனிட்கள் முறையே 18.10.2022 மற்றும் 05.11.2022 அன்று யூரியா உற்பத்தியைத் தொடங்கின. இந்த நான்கு ஆலைகளும் 50.8 லட்சம் மெட்ரிக் டன் உள்நாட்டு யூரியா உற்பத்தி திறனை நாட்டில் சேர்த்துள்ளன.

ஊட்டச் சத்து அடிப்படையிலான உர மானியக் கொள்கையை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது. 1.4.2010 பாஸ்பேடிக் மற்றும் பொட்டாசிக் (P&K) உரங்களுக்கு. பாலிசியின் கீழ், வருடாந்திர/அரை ஆண்டு அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு நிலையான அளவு மானியம், அறிவிக்கப்பட்ட பி&கே உரங்களுக்கு அவற்றின் ஊட்டச்சத்து உள்ளடக்கத்தைப் பொறுத்து வழங்கப்படுகிறது. இந்தக் கொள்கையின் கீழ், நியாயமான அளவில் சந்தை இயக்கவியலின் படி உர நிறுவனங்களால் MRP நிர்ணயிக்கப்படுகிறது.

மேலும், P&K உரங்கள் திறந்த பொது உரிமத்தின் (OGL) கீழ் உள்ளன.

இந்த உரங்களை இறக்குமதி செய்ய/உற்பத்தி செய்ய தடையற்ற அனுமதி உண்டு. பெறப்பட்ட கோரிக்கைகளை ஆய்வு செய்ததன் அடிப்படையில், உர நிறுவனங்களுக்கு அவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், புதிய பி&கே நிறுவனங்கள் மற்றும் அவற்றின் உரப் பொருட்களை என்.பி.எஸ்., திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தவும் அனுமதி வழங்கப்படுகிறது. உற்பத்தியை அதிகரிக்கவும், உர உற்பத்தியில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்யவும். எடுக்கப்பட்ட மற்ற நடவடிக்கைகள்:

(i) 100% உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உரமான மொலாசஸிலிருந்து (PDM) பெறப்பட்ட பொட்டாஷை ஊக்குவிக்க ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியம் (NBS) ஆட்சியின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளது. 13.10.2021.

(ii) மண்ணுக்கு பாஸ்பேட்டிக் அல்லது 'பி' ஊட்டத்தை வழங்குவதற்காக எஸ்எஸ்பி பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக காரீஃப் மற்றும் ரபி 2023-24க்கு உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட உரமான எஸ்எஸ்பியின் சரக்கு மானியம் பொருந்தும்.

(iii) (c): 2019-20 முதல் தற்போது வரை NBS மானியத்திற்கான ஆண்டு வாரியான செலவு பின்வருமாறு:

2019-20ல் ரூ. 83,468 கோடிகள், 2020-21 ரூ. 1,31,229 கோடிகள், 2021-22 ரூ. 157,640 கோடிகள், 2022-23 ரூ. 254,799 கோடிகள் ஆகும்.

சட்டப்படி அறிவிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையில் (MRP) விவசாயிகளுக்கு யூரியா வழங்கப்படுகிறது. 45 கிலோ யூரியாவின் MRP ஒரு மூட்டைக்கு ரூ.242 (வேம்பு பூச்சுக்கான கட்டணம் மற்றும் பொருந்தக்கூடிய வரிகள் தவிர). யூரியா உற்பத்தியாளர்/இறக்குமதியாளருக்கு இந்திய அரசாங்கத்தால் யூரியா உற்பத்தியாளர்/இறக்குமதியாளருக்கு மானியமாக யூரியா யூனிட்கள் மூலம் யூரியாவின் பண்ணை வாயிலில் விநியோகிக்கப்ப டும் விலை மற்றும் நிகர சந்தை உணர்தல் ஆகியவற்றுக்கு இடையே உள்ள வித்தியாசம். அதன்படி, அனைத்து விவசாயிகளுக்கும் மானிய விலையில் யூரியா வழங்கப்பட்டு வருகிறது.

2023-24 நிதியாண்டிற்கான P&K உரங்களின் தற்போதைய சராசரி MRP (30.01.2024 அன்று) (NIC ஆலோசகரிடமிருந்து பெறப்பட்டது) இணைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளையொட்டி விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முகப்பில் இருந்து மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. தலைமையில் ஊர்வலமாகச் சென்று விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. ம.ஜெயச்சந்திரன், செ.புஷ்பராஜ், தயா.இளந்திரையன், தேன்மொழி, இரா.சக்கரை, கோ.பாஸ்கரன், அப்துல் சலாம், பஞ்ச நாதன், தமிழ்ச்செல்வி பிரபு, சித்திக் அலி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



ஆறுமுகநேரி மெயின் பஜாரில் உள்ள வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் ரூ.32லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய உரக்கிடங்கு கட்டிடம் திறப்பு விழா நேற்று நடந்தது. இவ்விழாவிற்கு பேரூராட்சி தலைவர் கலாவதி கல்யாணசுந்தரம் தலைமை வகித்தார். துணைத்தலைவர் கல்யாணசுந்தரம், திருச்செந்தூர் கூட்டுறவு துணைபதிவாளர் மாரியப்பன், செயலாட்சியர் பிரபாவதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க மேலாளர் வெங்கடேசன் அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக அமைச்சர் அனிதாராதாகிருஷ்ணன் கலந்துகொண்டு உரக்கிடங்கு புதிய கட்டிடத்தை திறந்துவைத்தார். தொடர்ந்து காமராஜபுரத்தில் ரூ.2.65 கோடி திட்டமதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணியினை அமைச்சர் அனிதாராதாகிருஷ்ணன் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

## சீர்காழி தமிழிசை மூவர் மணிமண்டபம் -

# மாயூரம் முன்சீப் வேதநாயகம் அரங்கம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆய்வு! நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு !

மயிலாடுதுறை, பிப். 6 -

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தமிழிசை மூவர் மணிமண்டபம் மற்றும் மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் கட்டப்பட்டு வரும் மாயூரம் முன்சீப் வேதநாயகம் அரங்கம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டடப்பட்டு வருவதையும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் .மு.பெ.சாமிநாதன் ஆய்வு செய்தார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர்பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம் , மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என். ரவி, முத்து மகேந்திரன்,மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக. வீரபாண்டியன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் துணை செயலாளர் எஸ். செல்வமணி கண்ணகி மாவட்ட கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர் ஒன்றிய கழகச் செயலாளர்கள் செல்லசேது. ரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், ஏ.ஜி.ஜே.பிரபாகர், பஞ்சு.குமார், அமிர்த.விஜயகுமார், பி. எம்.அன்பழகன், எம்.அப்துல் மாலிக், என்,இளையபெருமாள், ஞான.இமய நாதன், பி.முருகுமணி, மூவலூர் எம். மூர்த்தி, கு.வைத்தியநாதன், மங்கை எம்.சங்கர் ஏ.ஆர். ராஜா, சீர்காழி நகரச் செயலாளர் மா. சுப்பராயன் மயிலாடுதுறை நகர செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ், பேரூர் கழகச் செயலாளர் அண்ணாதுரை, முத்துராஜா, அன்புச்செழியன், சம்சுதீன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், காந்தி, கென்னடி, ஹர்ஷத், நத்தம் வின்சென்ட், எஸ். வெற்றிவேல் சங்கரநாராயணன், சுபாநெடுஞ்செழியன் மாவட்ட ஊராட்சித் தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், ஒன்றியக்குழு தலைவர்கள் காமாட்சி மூர்த்தி , ஜெயப்பிரகாஷ், மகேந்திரன், சீர்காழி நகர் மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்;

மு.பெ.சாமிநாதன்செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்

மாயூரம் கவிஞர் வேதநாயகம் பிள்ளை அவர்களுக்கு அரங்கம் மற்றும் சிலையும் மயிலாடுதுறையில் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அந்த வகையில், செய்தித்துறையின் மூலமாக அந்த பணியை பொதுப்பணித்துறையின் வாயிலாக இந்த அரங்கத்தின் கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகின்றது. இதற்கு ரூ.3 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சர் அவர்கள் நிதி வழங்கியுள்ளார்கள். இது போன்று, தமிழ்நாடு முழுவதும் சுதந்திர போராட்ட வீரர்கள், தமிழ்மொழி தியாகிகள், மக்களுக்காக உழைத்திட்டவர்கள் போன்ற தலைவர்களுக்கு அரங்கம், சிலை அமைக்கும் பணியை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், சீர்காழியில் தமிழிசை மூவர் மணிமண்டபம் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளோம். மேலும், இப்பணிகள் விரைவாக முடிவுற்று மக்கள் பயன்பாட்டிற்கு வர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அதுபோல், மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் அமைந்துள்ள தமிழிசை மூவர் மணிமண்டபமும் ஆய்வு செய்து செய்தித்துறை மூலம் பொதுப் பணித்துறை வாயிலாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஏறத்தாழ ரூ.47 இலட்சம் மதிப்பீட்டில் 95 சதவீத பணிகள் நடைபெற்றுள்ளது. விரைவில் இது மக்களுடைய பயன்பாட்டிற்கு குறிப்பாக, போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் இவ்விடம் ரூ.13 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று உள்ளது. என தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்.

## தி.மு.க. இலக்கிய அணி

# மதுரை தெற்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

## தி.மு.க.இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு !

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி அமைப்பாளராக பா.விஜய் (2/42, தெற்குத் தெரு, பெரியக்கட்டளை அஞ்சல், பேரையூர் தாலுக்கா, மதுரை - 625 527) நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள் இவருடன் இணைந்து பணியாற்றிட கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 05.02.2024

**வி.பி.கலைராஜன்,**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# தடா தனசேகரன்

### பிப்ரவரி 6 (1992)




**ஜெயலலிதா அரசின் "தடா" சட்டத்தைக் கண்டித்து சென்னையில் நடைபெற்ற மாபெரும் பேரணியில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குண்டடிபட்டு உயிரிழந்தார் சென்னை 3வது வட்ட இளைஞர் அணியின் தம்பி தனசேகரன்.**

**"தம்பி! உன் தியாகம்; தமிழ்நாட்டு மக்களை ஒருங்கிணைத்து; தடா தர்பார் ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதற்கான முன்னுரையாக அமையட்டும்! எனக் கூறி; "அந்த ஆதிதிராவிட இனத்து அடலேறாம் தனசேகரனுக்கு வீரவணக்கம் செலுத்துவோமாக" என தலைவர் கலைஞர் அவர்கள் உடன்பிறப்புக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


நாள் : 06.02.2024 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி
இடம் : துறைமுகம் சட்டமன்றத் தொகுதி
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை
சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும்
பயிற்சி முடித்த மாணவ,
மாணவியர்களுக்கு சான்றிதழுடன் கணினி
மற்றும் தையல் இயந்திரம் வழங்கிடவும்
கல்யாணபுரம் திட்டப்பகுதியில்
ரூ. 44.91 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள
288 புதிய குடியிருப்புகள்
திறந்து வைத்திடவும் வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக. வருக..
தா.மோ.அன்பரசன்
குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்
நிறுவனங்கள் துறை அமைச்சர்
பி.கீதா ஜீவன்
சமூக நலன் மற்றும்
மகளிர் உரிமைத்துறை அமைச்சர்
தயாநிதிமாறன்
மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர்
மகிழ்வுடன் வரவேற்கும்
பி.கே.சேகர்பாபு
இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர்
ARASU ARTS




# புதிய தமிழ்நாடும் கலைஞரும்...

■ நீரை.மகேந்திரன்

1986 ஆம் ஆண்டு கும்பகோணம் நகரத்தில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஒரு மருத்துவ மனையைத் திறந்து வைத்து உரையாற்றிய காணொலியை சமீபத்தில் பார்க்க முடிந்தது. அந்த உரையில் வெளிநாட்டு மருத்துவமனைகள் வெற்றிபெறுவதற்குக் காரணம் நவீன மருத்துவக் கருவிகள். அத்தகைய மருத்துவக் கருவிகள் தமிழ்நாட்டிலும் வர வேண்டும் என அந்த உரையில் தனது ஆர்வத்தைக் குறிப்பிடுகிறார்.

அப்போது, தமிழ்நாட்டில் அரசு மருத்துவர்கள் பெருகத் தொடங்கி இருந்த காலம். மருத்துவக் கருவிகளுக்கான முன்னேற்றம் குறித்து அவர் குறிப்பிட்டார்.

## முன்னேற்றங்களின் ஆசை

தமிழ்நாட்டில் அவ்வளவு எளிதாக யாரும் மருத்துவப் படிப்பு படிக்க முடியாது என்ற நிலையை மாற்றி, அரசு மருத்துவக் கல்லூரி இடங்களையும், மருத்துவக் கட்டமைப்புகளையும் உலகத் தரத்துக்கு உயர்த்தியது அவர்தான். 1986 ஆம் ஆண்டு உரையில் கூறுவது போல நவீன மருத்துவ சாதனங்களுக்கான கனவு, அவர் வழியே தமிழ்நாட்டை வந்தடைகிறது எனலாம்.

அதற்கு முன் அவர் ஆட்சியில் இருந்த காலத்தில் 1975 ஆம் ஆண்டில் ஒரு பத்திரிகை நேர்காணலில் கூறுகிறார்.

“வெளிநாடுகளைப் போல அற்புத விஞ்ஞான முன்னேற்றங்கள் தமிழ்நாட்டுக்கு வர வேண்டும் என்று ஆசை இருந்தாலும், அதற்கு நீண்ட காலம் பிடிப்பதைப் பற்றிக் கூட எனக்குக் கவலை இல்லை. எங்கள் நோக்கமெல்லாம் இங்குள்ள சாதாரண மக்களை மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் வாழச் செய்ய வேண்டும் என்பதுதான்” எனக் குறிப்பிடுகிறார்.

‘நெஞ்சுக்கு நீதி’ நூலில் இதைக் குறிப்பிடும் கலைஞர், பழைய தமிழ்நாடு, புதிய தமிழ்நாடு, மக்கள் நிலை, அறிவு வளர்ச்சி, இலக்கிய இன்பம், அரசியல் அலைகள் அனைத்தையும் குறிப்பிட்டு, தொடர் எழுத வேண்டும் என ஆசைப்பட்டு ‘நெஞ்சுக்கு நீதி’ எழுதத் தொடங்கியதாக சொல்கிறார்.

கலைஞர் 1975 இல் குறிப்பிட்டது போல ‘பழைய தமிழ்நாடு’, ‘புதிய தமிழ்நாடு’ என அவர் காலத்தில் இருந்தே தொட்டுக்காட்டிய பல ஒப்பீடுகளை சமகாலம் வரையிலும் எழுதலாம். அதில் கலைஞர் என்பவர் ‘நவீன தமிழ்நாட்டின் சிற்பி’ என்பதை நாம் அறிய முடியும்.

## புதிய ஏற்பாடுகள்

வளர்ச்சிக் கோட்பாட்டில், பழைய தமிழ்நாட்டுக்கும் புதிய தமிழ்நாட்டுக்குமான கோடு அவரிடமிருந்துதான் தொடங்குகிறது. பழைய தமிழ்நாட்டில் போக்குவரத்து மக்களுக்கான சேவை கிடையாது. சாலை வசதிகள் கிடையாது. மக்கள் அதிகமாகப் புழங்கக்கூடிய இரு நகரங்களுக்கு இடையிலான தடங்களில் மட்டுமே போக்குவரத்து இருந்தது. சிற்றூர்களுக்கான போக்குவரத்து என்பது நினைத்துப் பார்க்க முடியாதது. பள்ளிகள், கல்லூரிகளின் கதவுகள் எளியோர்களுக்குத் திறக்கப்பட்ட நேரம், கிராமங்களில் இருந்து தொலைவில் உள்ள நகரங்களுக்கு மாணவர்கள் வந்து செல்வதற்குப் போக்குவரத்து அவசியமாக இருக்கிறது.

கலைஞர் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கையில் முக்கியமான அந்தப் பொறுப்பினை, தனது கடமையாக ஏற்று நிறைவேற்றிக் காட்டுகிறார். கூடவே சிறுநகரங்களுக்கான சாலை வசதிகளையும், இணைப்புச் சாலை வசதிகளையும் உருவாக்கியதன் மூலம் போக்குவரத்தும் சிறு நகரங்கள் இணைப்பும் பள்ளி - கல்லூரி வாய்ப்புகளும் ஒருசேர புதிய தமிழ்நாட்டுக்கான ஏற்பாடுகளாக உருவாகின.

## திரைச் சவால்கள்

சமீபத்தில், திரைத்துறை நண்பர்கள் சிலருடன் உரையாடிக் கொண்டிருக்கையில், தமிழ்நாட்டின் கிராமங்களைக் குறிப்பாக 60 - 70 காலகட்டத் திரைப்படங்களை உருவாக்குவதில், தற்போது இருக்கும் சவால்கள் குறித்து அந்த உரையாடல் இருந்தது. அதில் அவர்கள் குறிப்பிட்டது, “மின்சாரக் கம்பங்கள் இல்லாத ஓர் ஊரைக் காட்சிப்படுத்துவது இப்போது சவாலாக உள்ளது” என்றனர். அது முற்றிலும் உண்மை.

இயக்குநர் அமீர் இயக்கிய ‘பருத்திவீரன்’ திரைப்படத்தின் முன்னோட்டக் காட்சியைப் பார்த்த கலைஞர், அந்தத் திரைப்படத்தில் ஒரு காட்சியில் கூட மின்கம்பம் இல்லாதது குறித்து அவரிடம் கேட்டு இருக்கிறார். “இப்படி ஒரு கிராமம் எங்கு இருக்கின்றது?” என வினவி இருக்கிறார்.” “இல்லை, நாங்கள் மின்கம்பத்தைத் தவிர்த்து விட்டுப் படம் எடுப்பதே சவாலாக இருந்தது” என அமீர் குறிப்பிட்டார்.

பழைய தமிழ்நாட்டின் அனைத்து ஊர்களுக்கும் மின் வசதி கிடையாது. ஆனால் 70 க்குப் பின்னர், கலைஞரின் ஆட்சிக் காலத்தில் கிட்டத்தட்ட தமிழ்நாட்டின் அனைத்து கிராமங்களுக்கும் மின்வசதி கொண்டு வரப்படுகிறது. கலைஞரின் மூன்றாவது ஆட்சிக் காலத்தில் மின் இணைப்புப் பெறாத அனைத்து வீடுகளுக்கும் ஒரு மின்விளக்குத் திட்டம் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. கலைஞர் உருவாக்கிய புதிய தமிழ்நாட்டின் ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு வீட்டிலும் மின்சார இணைப்பு புதிய வரலாற்றைக் கொண்டு வந்தது.

**கலைஞர் ஆட்சிக்குப் பிறகான தமிழ்நாட்டில்தான் அது உருவாகிறது. குறிப்பாக, வெளிநாட்டு நிறுவனங்களுக்கான ‘பிளேஸ்மென்ட்’ என்கிற அளவில் பல படிகள் முன்னேறி இருக்கிறது என்பதையும் உணரலாம்.**

## வேலைவாய்ப்புப் பிரிவு

1971 ஆம் ஆண்டில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அவருக்கு மதிப்புறு முனைவர் பட்டத்தை வழங்கியது. அப்போது அவரது உரை ‘பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தேடித் தருவதற்கு பல்கலைக்கழகத்தில் தனிப்பிரிவு ஒன்றினை ஏற்படுத்துவது அவசியம் என்பதாக இருந்தது. பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் வேலைக்குத் தகுதி உடையவரைத் தேர்ந்தெடுக்கும்போது பல்கலைக்கழகத்தில் இந்தப் பிரிவினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்’ என்கிறார்.

மேலைநாடுகளில் கல்லூரியில் தேர்ச்சி பெறுவதற்கு முன்பாகவே அவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் அளிக்க நிறுவனங்கள் முன் வருகின்றன. அத்தகைய நிலை நம் நாட்டில் உருவாவதற்கு இன்னும் பல ஆண்டுகள் செல்லக் கூடும் என்ற போதிலும், இதற்கு உடனடியான தொடக்கம் காண வேண்டும் என்கிறார். கலைஞர் ஆட்சிக் காலத்துக்கு முன்பான தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புத் துறைக்கான பல்கலைக்கழகங்களில் தனி ஏற்பாடுகள் கிடையாது.

கலைஞர் ஆட்சிக்குப் பிறகான தமிழ்நாட்டில்தான் அது உருவாகிறது. குறிப்பாக, வெளிநாட்டு நிறுவனங்களுக்கான ‘பிளேஸ்மென்ட்’ என்கிற அளவில் பல படிகள் முன்னேறி இருக்கிறது என்பதையும் உணரலாம்.

## காலப் பகுப்பாய்வு

இப்படி தி.மு.கழக ஆட்சிக் காலத்துக்கு முன்னரான தமிழ்நாடு, தி.மு.கழக ஆட்சி காலத்துக்குப் பின்னரான தமிழ்நாடு எனப் பகுத்துப் பார்ப்பதும் பேசுவதும் இன்றைய அரசியல் சூழலில் அவசியமாக இருக்கிறது.

தி.மு.கழக ஆட்சியையும், முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சிக் கலையையும் புறந்தள்ளிப் பேசுபவர்கள் உருவாகக்கூடும் என அறியாதவரா அவர்? அதற்கும் எழுதி வைத்திருக்கிறார். “அவனவன் தன் நெஞ்சுக்குத் தனக்குத் தானே நீதி வழங்கிக் கொள்ள வேண்டும்” என்கிறார். புதிய தமிழ்நாடு, பழைய தமிழ்நாடு இரண்டையும் பகுத்துப் பார்த்து கலைஞர் பக்கம் நிற்பதே, நமது நெஞ்சு, நீதியின் பக்கம் நிற்பதற்கான சான்று.

---

## திராவிட இயக்க இதழ்கள் - ‘திருவிடம்’



திராவிட இயக்க அறிஞர்களில் ஒருவரான அர.திருவிடம் அவர்களால், 1972 ஜூன் 1 ஆம் நாள் முதல் வெளியிடப்பட்டு வந்த இதழ், ‘திருவிடம்’. திராவிட இயக்கக் கொள்கைகள், சுயமரியாதைச் சிந்தனைகள் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து வந்த இந்த இதழ், வார இதழாக வெளிவந்தது. தொடக்கத்தில், திருவாரூரிலிருந்து வெளிவந்த இதழ், சில மாதங்களுக்குப் பிறகு சென்னையிலிருந்து வெளிவரத் தொடங்கியது.

திராவிட இயக்கம் சார்ந்த முன்னோடிகளின் படங்களை இந்த இதழ் தனது முகப்பு அட்டையில் தாங்கி வந்தது. தந்தை பெரியாரின் கருத்துகளை, இந்த இதழ் முதன்மைப் படுத்தியது. மேலும் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், மரபுப் பாடல்கள், ஆய்வுத் தொடர்கள் ஆகியவையும் இந்த இதழில் இடம்பிடித்தன.

மிக முக்கியமாக, ‘மந்திரமா தந்திரமா?’ என அறிவியல் விளக்கம் தந்து செய்முறை காட்டிய படைப்புகள் வெளிவந்தன. சாலை இளந்திரையன், கி.வீரமணி, சி.பி.சிற்றரசு, நெ.து.சுந்தர வடிவேலு, திருவாரூர் கே.தங்கராசு போன்றோரின் படைப்புகள் இதில் இடம்பெற்றிருக்கின்றன. நிறைய கோட்டோவியங்களுடன், பரிசுச்சீட்டு, குடும்ப நலத்திட்டம் போன்ற அன்றைய தமிழ்நாடு அரசின் செயல்திட்ட விளம்பரங்களும் காணப்படுகின்றன.

---

## :ப்ளாஷ்பேக்





பால. சிவகுமார்

### சிறிய உரை!

1991 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இன்றைய நம் கழகத் தலைவர் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் அவர்களுக்கு நான் மரியாதை செய்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. ‘அலைகடல் அய்யா’ வெற்றிகொண்டான் அவர்கள் தலைமை வகிக்க, தளபதி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். தளபதியார் அவர்களும், அய்யா வெற்றி கொண்டான் அவர்களும் இடம்பெற்றிருந்த அந்தப் பொதுக்கூட்டத்தில், நானும் சிறிய உரை நிகழ்த்தியது இன்றும் பசுமையான நினைவாக இருக்கிறது.

**-பை-பாஸ் பாலா.சிவகுமார், 70-வது வட்ட கழக செயலாளர், மதுரை மாநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

---


## கருவூலம்

### மாநகராட்சி மன்றங்களா மாநிலங்கள்?

**1963 ஆம் ஆண்டில் பிரிவினைத் தடைச் சட்டத்தை எதிர்த்து, அண்ணா மாநிலங்களவையில் பேசினார். அப்போதுதான் ‘மாநில சுயாட்சிக்கான முழக்கம்’ அண்ணாவின் பேச்சில் முதன்முதலாக சூசகமாக வெளிப்பட்டது. ‘‘நாட்டின் ஆதிபத்திய உரிமையை தி.மு.க எதிர்க்கவில்லை. கூட்டாட்சி செயல்படும் முறை மீதுதான் எங்களுக்குக் குறை. மாநிலங்களை டில்லி ஏதோ மாநகராட்சி மன்றங்கள் போல நடத்தி வந்திருப்பதாகக் கருத வேண்டியிருக்கிறது’’ என்றார் அண்ணா.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 380




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.